# வெளியே அழைக்கப்பட்டவர்கள்

# THE CALLED OUT

## 58-01-09

உரைக்கப்பட்ட வார்த்தையே மூலவித்து

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## வெளியே அழைக்கப்பட்டவர்கள்

*ஏழாம் தூதன் (வெளி. 10:7) சகோதரன் வில்லியம் மரியன் பிரன்ஹாம் அவர்களால் 1958-ம் வருடம், ஜனவரி மாதம், 09-ம் தேதி சிகாகோ, இல்லினாய், அமெரிக்காவில் பிரசிங்கிக்கப்பட்ட இந்தச் செய்தியானது ஒலிநாடா ஒலிப்பதிவிலிருந்து அச்சிடப்பட்ட ஆங்கில புத்தகத்திலிருந்து ஏட்டிதழின் பக்கத்திற்கு சொல் வடிவமான செய்தியாக மாற்ற ஒவ்வொரு முயற்சியும் துல்லியமாக செய்யப்பட்டு, இப்புத்தகம் முழுமையாக அச்சிடப்பட்டு,* ***Word of Life Ministry*** *மூலமாக இலவசமாக விநியோகிக்கப்படுகின்றது.*

**வெளியிடப்பட்டது: மார்ச் 2026**

**Word Of Life Ministry**

**Bro. Peniel Ebi**

**5/337,Durga Garden,**
**Nagama Naicken Palayam,**
**Sulur (T.K)**
**Coimbatore-641016**

**Phone: 9047268278 /9487972418**

**Web: www.wordoflife.in**

# வெளியே அழைக்கப்பட்டவர்கள்

# *The called out*

## 58-01-09

ஆமென். (தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக மற்றும் உம்மை எங்களுடன் கொண்டிருப்பதில் மிக்க மகிழ்ச்சியுள்ளவர்களாக இருக்கிறோம் என்று சகோதரன் ஜோசப்போஸ் கூறுகிறார்-ஆசி.) சகோதரன் ஜோசப் உமக்கு நன்றி.

2. நாம் ஜெபம் செய்வோம். ஓ, கர்த்தாவே, மறுபடியும் இன்றிரவில் உம்மை ஆராதிப்பதற்கு கிடைத்த நல்வாய்ப் பிற்காக நாங்கள் உமக்கு மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். உம்முடைய பிரசன்னம் எங்கள் அனை வரையும் ஆசீர்வதிக்கும்படி நாங்கள் கேட்கிறோம். தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு என்று நீர் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதைக் காணும் நல்ல தருணத்தை இன்றிர வில் நாங்கள் கொண்டிருப்போமாக; வழிதவறிபோன போன அந்த ஆடுகளைத் திரும்பக் கொண்டுவருவீராக.

3. ஓ, நித்தியமானவரே, ஆசிர்வதிக்கப்பட்ட தேவனே, இதற்குமுன் ஒருபோதும் இராதவண்ணம் உம்முடைய வார்த்தையின் மூலமாக எங்களுடன் பேசுவீராக. இராஜ்ஜியத்திற்குள் பிள்ளைகள் பிறப்பதை காணவேண்டும் என்ற எங்கள் இருதயத்தின் வாஞ்சையை அருளிச்செய்யும். அதன்பிறகு வியாதியஸ்தர்களைச் சுகமாக்கும், வேதனை யில் உள்ளவர்களையும் சுகமாக்குவீராக; இந்த ஆராதனை யில் நீர் மகிமை அடைவீராக, எங்களை உம்மிடம் ஒப்புக் கொடுக்கிறோம். இவைகளை உம்முடைய பரிசுத்தமுள்ள பிரியமான குமாரனாகிய இயேசுவின் நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

4. அமர்வோமாக. ஒரு சிறிய உதவி அதன் பாதையில் வந்து கொண்டிருக்கிறது என்பதை அறிந்ததால், இந்த மாலை வேளையில் நான் மிகுந்த மகிழ்ச்சி உள்ளவனாக இருக்கிறேன், அதாவது சகோதரன் டாமி ஆஸ்பர்ன் (Tommy Osborn) என்னுடைய நல்ல சகோதரன் மற்றும் நண்பர். கறுப்புத் தங்கம் (Block Gold) என்று அழைக்கப் படும் படத்துடன் அவர் சனிக்கிழமை இரவிற்கு இங்கு வர வேண்டியவராய் இருக்கிறார், அது அவ்வாறுதான் என்று நான் நம்புகிறேன். அதன்பின்னர் ஞாயிற்றுக்கிழமை மாலை வேளையிலும் அவர் உதவியாய் இருப்பார். சகோதரன் டாமி பிரசங்கம் நிகழ்த்துபவராகவும், வியாதியஸ்தர்களுக்கு ஜெபிப்பவராகவும் இருப்பார், ஆகவே கர்த்தருடைய மகத்தான ஊழியக்காரர் டாமி ஆஸ்பர்ன் அவர்களை களிகூர்ந்து மகிழ்வீர்கள் என்று நான் அறிவேன்.

5. மேலும் இப்பொழுது, இன்றிரவில் கர்த்தருக்குச் சித்த மானால்... நான்—நான் இரண்டு வேதாகமங்களை வைத்துள் ளேன், அவைகள் இரண்டின் மூலமாகவும் நான் பிரசங் கிக்க விரும்பவில்லை, ஆனால் நான் ஒரு தலைப்பைக் கொண்டுள்ளேன் அல்லது ஒரு வேதாகமத்திலிருந்து ஒரே ஒரு வசனத்தை வாசிக்க விரும்புகிறேன் மற்றும் இன் னொரு பகுதியை வேறொரு வேதாகமத்திலிருந்து வாசிக்கப் போகிறேன்.

6. பரிசுத்த லூக்கா எழுதின சுவிசேஷப் புத்தகம் 17-ஆம் அதிகாரம், 26-வது வசனம் தொடங்கி, இதை நாம் வாசிப்போம்:

**நோவாவின் நாட்களில் நடந்ததுபோல மனுஷகுமாரனு டைய நாட்களிலும் நடக்கும்,**

**நோவா பேழைக்குள் பிரவேசித்த நாள் வரைக்கும் ஜனங் கள் புசித்துக் குடித்தார்கள், பெண்கொண்டு கொடுத்தார்கள்; ஜலப்பிரளயம் வந்து எல்லோரையும் அழித்துப்போட்டது,**

**லோத்தினுடைய நாட்களில் நடந்ததுபோலவும் நடக்கும்; ஜனங்கள் புசித்தார்கள், குடித்தார்கள், கொண்டார்கள், விற்றார் கள், நட்டார்கள், கட்டினார்கள்,**

**லோத்து சோதோமைவிட்டுப் புறப்பட்ட நாளிலே வானத்தி லிருந்து அக்கினியும் கந்தகமும் வருஷித்து எல்லோரையும் அழித்துப்போட்டது.**

**மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும்.**

7. இப்பொழுது, வேதபாடமாக... ஆகவே ஒரு செய்தித் தலைப்பைப் பெற்றுக்கொள்ளும்படி, அதை நான் வாசிக் கிறேன். ஆசீர்வதிக்கப்பட்ட ஆதியாகமம் புத்தகம், 19-வது அதிகாரம் 22-வது வசனம் தொடங்கி, அது இவ்விதமாக எழுதப்பட்டுள்ளது:

**...தீவிரமாய் அங்கே ஓடித் தப்பித்துக்கொள், நீ அங்கே போய்ச் சேருமட்டும் நான் ஒன்றும் செய்யக்கூடாது என்றார்...**

8. இப்படியாய்க் கர்த்தர் அனுமதிப்பாரானால், இன்றிரவு செய்தியின் பொருளை அதிலிருந்து எடுக்கப்போகிறேன், **வெளியே - அழைக்கப்பட்டவர்கள்** என்பதே.

9. நேற்று மாலையில் "சுவற்றில் எழுதப்பட்ட கையெழுத்து" என்னும் பொருளில் பேசும்படி என் இருதயத்தில் வைக்கப்பட்டது. கர்த்தர் நம்மை ஆசீர்வதித் தார். நம்மை ஆசீர்வதித்தது மட்டுமல்ல, ஆனால் அவரு டைய இராஜ்ஜியத்தைக்குறித்து மேலும் நாம் அறிந்து கொள்ளவும், அவருடைய வார்த்தையை வாசிக்க அனு மதித்தார், ஆகவே சமீபத்தில் இருக்கும் காரியங்களை பரிசுத்த ஆவியானவர் நமக்கு வெளிப்படுத்தி தருவாராக.

10. அவ்வாறு நாம் செய்கையில், மகத்தான நவீன கால பாபிலோனை, மகத்தான நவீன கால அமெரிக்காவுடன் ஒப்பிட்டோம். இன்று நம்முடைய தேசத்தில் அவைகளை பார்க்கிறோம், அவர்கள் சுவரிலே கையுறுப்புத் தோன்றி

எழுதின கையெழுத்துக்களைப் பார்த்தார்கள். அதே நிலையில் நாமும் இருப்பதைப் பார்த்தோம். அதன் பின்னர், சுவரில் எழுதப்பட்ட கையெழுத்துக்களை நாம் பெற்றுள் ளோம் என்பதைக் கண்டோம், ஒழுக்கத்தைப் பற்றி பேசினால், அதே நிலைமைகள்தான் இங்கும் இருக்கிறது. அந்த நாட்களில் இருந்த ஒழுக்கங்கெட்ட பெண்களுடன் சேர்ந்து மதுவைக் குடித்துக்கொண்டிருந்தார்கள், அவர்கள் மறுமனையாட்டிகள் என்று அழைக்கப்பட்டார்கள், அது போலவே இந்நாளில் அவர்கள் திரைப்பட நட்சத்திரங்கள் என்று அழைக்கப்படுகிறார்கள், இன்னும் இதுபோன்று பல பெயர்களில் அழைக்கப்படுகிறார்கள். அன்றைக்கு அவர்கள் தங்கள் வர்க்கத்தில் அவ்விதம் இருந்தார்கள், இப்பொழுதோ எல்லாவிடங்களிலும் அப்படிப்பட்டவர்கள் சிதறி இருக்கிறார்கள்.

11. பாவம் என்பது ஒரு தட்டில் (Saucer) உடைத்து ஊற்றப்பட்ட ஒரு முட்டையைப் போன்றது. அதன் மத்தி யில் இருக்கும் மஞ்சள் கருவே பாவம். அது மஞ்சள் கரு என்று அழைக்கப்படுகிறது என்று நான் நம்புகிறேன். அந்த மஞ்சள் கருவை மட்டும் தனியே எடுப்பதற்குச் செல்லும் போது, அது அந்த முட்டை முழுவதுமே பரவிவிடும். பாவமும் அவ்வாறே இருக்கும். அதை வியாபாரமாக்க நீங்கள் போகும்போது மற்றும் - மற்றும் அதை சரிப்படுத்தி அழகாய் காணும்படி செய்ய வேறுபெயர் கொடுத்தால் எல்லா இடங்களிலும் அதைப் பரவச் செய்வீர்கள். அதைத் தான் மகத்தானதும், நம்முடைய அன்பானதுமான, நம் முடைய தேசத்தில் பாவம் அதைத் தான் செய்துள்ளது. அது மாயக் கவர்ச்சியை உண்டு பண்ணியுள்ளது அல்லது கவர்ச்சிப்படுத்தப்பட்டுள்ளது என்று நான் நினைக்கிறேன். பாவம் என்பது கவர்ச்சியாகி விட்டது.

12. பல வருடங்களுக்குமுன், பழமை வாய்ந்த சார்லி பார்லிகார்ன் (Charlie Barlecon) என்னும் (புராண கற்பனை

விலங்கு) உயிரினத்தை பெற்றிருந்தார்கள், அது மிகப் பயங்கரமான தோற்றத்தையுடைய உயிரினம், அதனுடைய தொப்பி அவனுடைய காதுகள் வரைக்கும் இழுத்து விடப்பட்டு பார்ப்பதற்கு வரலாற்றிற்கு முந்தைய கால விலங்கு போல காட்சியளிக்கும், சில வருடங்களுக்கு முன் சார்லி பார்லிகார்ன் அவ்வாறு இருந்தது. இன்று அது மிகவும் மெருகேற்றப்பட்டுவிட்டது. அவர்கள் அவனை இந்நாட்களில் மிகப்பெரிய அளவில் அழைக்கிறார்கள், கிறிஸ்தவர்களின் குளிர்சாதனப் பெட்டி என அழைக்கப் படுவதில் அவன் மிகவும் பிரசித்தியுடையவன். அது சரியே. ஆனால் அவன் அந்தப் பழைய பொல்லாத அசுத்த ஆவியே.

13. பாட்டிமார்களால் அது பயன்படுத்தப்படுவது வழக் கத்தில் இருந்தது, சோளத்தட்டைக் குழாயில் அவள் புகை பிடிப்பதுண்டு, அதனால் ஏற்படும் பல் வலியிலிருந்து விடுபட அவ்வாறு செய்வதுண்டு. ஆனால், ஓ, அந்தப் பிசாசு எவ்வளவு பிரசித்தி உள்ளவனாகி விட்டான். மகள், தாயார், சிறுப் பிள்ளைகள்கூட புகை பிடிக்கிறார்கள், அது பிரசித்தம் அடைந்துள்ளது. ஆனால் பாவம் என்பது பாவ மாகவே இருக்கிறது. அது சற்றே வேறு ஒரு பெயரில் மறைந்து கிடக்கிறது.

14. ஒரு காலத்தில் சூதாடுவது தவறாக இருந்தது, அவ கீர்த்தியான இடங்களில், மதுபான விடுதிகளில் அது நடை பெற்றது. மரியாதைக்குரியவர்கள் அங்கு செல்ல மாட்டார் கள், மேலும் ஸ்திரிகள், தெருக்களில் செல்லும் போது, அங்கே ஒரு மதுபான விடுதி இடம் இருந்தால், வேறு பக்கமாக ஒதுங்கி செல்வார்கள். ஆனால் இன்றோ, குழந்தைகளைக் குழந்தை பராமரிப்பாளரிடம் விட்டு விட்டு மதுபானம் அருந்தும் இடங்களில் தன்காலை வைக்கிறார் கள், ஒரு தாயாராய் இருப்பதற்குப் பதிலாக தன்னுடைய

பெரும்பாலான நேரத்தை மதுபான விடுதிகளில் கழிக்கிறாள், அவள் பிரசித்தி உள்ளவளாக இருக்கிறாள்.

15. சூதாட்டம், அவைகள் ஒரு காலத்தில் குகைகளிலும் பாதாள அறைகளிலும் நடந்தன. ஆனால் இப்போதோ, கூட்டாளிகள் சேரும் எல்லா நேரங்களிலும், சீட்டுக்கட்டுகளை வெளியே எடுக்கிறார்கள், விளையாடுவதற்குச் செல்கிறார்கள். அப்பொழுதும் அது பாவமே. அதற்குரிய தண்டனையை நீ அடைந்தே ஆகவேண்டும். தேவன் உனக்கு அதை செய்வார். அவர் பாவத்தை வெறுக்கிறார், ஏனென்றால் அவர் பரிசுத்தமுள்ள தேவன். பரிசுத்தமுள்ள தேவன் பாவத்தைப் பொறுத்துக் கொள்ளமாட்டார். அவர் பாவத்தின் பக்கமாக நின்றிருப்பார் என்றால், முதல் பாவம் செய்யப்பட்டபோது அதைத் தடுத்து நிறுத்தியிருப்பார், எல்லாவற்றையும் நிறுத்திப்போட்டிருப்பார். ஆனால் பாவத்திற்கு மரணமே பரிகாரம், அப்படி செய்கிறவர்கள் ஏற்கனவே அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்திருக்கிறார்கள். அது காயப்படுத்துகிறது என்பதை நான் அறிவேன். ஆனால் அது காயப்படுத்த வேண்டும் என்றே நான் கருதுகிறேன்.

16. அவைகள் மூலமாக மிகப்பெரிய அளவில் கேடுகள் உண்டாவதை நாம் பார்க்கிறோம், இந்த தேசத்தை வாரிக்கொண்டு போகிற ஒரு நியாயத்தீர்ப்பு வந்து கொண்டிருப்பதை நாம் காண்கிறோம், ஏனென்றால் தேவன் நம்மைப் பாவத்தோடு கடந்து செல்ல அனுமதிக்கமாட்டார். நாம் வாழ்கிற இந்த பாவ வாழ்க்கையை, தேவன் அனுமதித்தால் அவர் நீதியுள்ள தேவனாய் இருக்க முடியாது. அதற்குரிய கிரயத்தை நாம் செலுத்தியே ஆகவேண்டும்.

17. நான் ஏற்கனவே கூறியதுபோல், நான் மறுபடியும் கூறுகிறேன்: பரலோகத்தின் தேவன் நாம் செய்து கொண்டிருப்பதையே செய்ய அனுமதிப்பாரானால், அவர், நீதியுள்ள

தேவனாயிருப்பதால் அவர் சோதோம், கொமோரா ஜனங்களை உயிர்த்தெழச்செய்து, அவர்களை அழித்ததற்காக அவர்களிடம் அவர் மன்னிப்பு கேட்க வேண்டும், ஏனென்றால் அவர்கள் எப்படி மோசமானவர்களாக இருந்தார்களோ அவ்வளவு மோசமானவர்களாக இருக்கிறோம், ஒருவேளை இன்னும் மோசமானவர்களாகக் கூட இருக்கலாம்.

18. மேலும் இப்பொழுது, உண்மையான தேவனுடைய ஆவியை சிறிதளவேனும் பெற்றுள்ள எந்த ஒரு மனிதனும், வந்துகொண்டிருக்கிற பயங்கரமாக வெடித்து சிதறும் நியாயத்தீர்ப்பை உணரக்கூடும். உங்களுடைய ஆவியில் அதைப் பகுத்தறிய முடியும், மேலும் ஏதோ சம்பவிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது, என்பதை அறிந்தவனாக இருப்பான். முழு உலகமே நடுங்கிக்கொண்டு இருக்கிறது, சிறிய தேசங்கள், பெரிய தேசங்கள், ரஷ்ய பொதுவுடமைக் கட்சி அங்கத்தினர், பொதுவுடமை கட்சி, தேவனற்றவர்கள், இரக்கமற்றவர்கள், இரக்கமற்ற மதவெறி கூட்டம் இத்தகைய வல்லமைகள் ஒருநிமிட நேரத்தில் இந்த உலகத்தை சாம்பலாக்கும் வல்லமையைக் கொண்டுள்ளார்கள்.

19. தேவனுடைய இரக்கங்களினாலும், நீடிய பொறுமையினாலுமே அது நிகழாமல் தாங்கிப் பிடித்துக்கொண்டிருக்கிறது. காலை விடிவதற்குள் நாம் ரஷ்ய நாட்டின் செயற்கைக்கோளாக இருப்போம். அப்படியிருந்தும் அதை நாம் கண்டுகொள்ள தவறியிருப்போம் எப்பொழுதும் போலவே சென்றுகொண்டிருப்போம், முழு உலகமும் நரம்பு தளர்ச்சியினால் பாதிக்கப்பட்டவர்களாய் இந்த நரம்பு தளர்ச்சி நோய் எல்லாம் ஏன் சம்பவிக்கிறது என்று அவர்கள் அறியமாட்டார்கள், உலகமும் நரம்பு தளர்ச்சியினால் பாதிக்கப்பட்டுள்ளதாய் இருக்கிறது. மனநிலை மருத்துவர்கள் கூட மனநோயால் பீடிக்கப்பட்டு, நரம்பு தளர்ச்சியுற்றிருக்கிறார்கள்.

20. இயற்கையினால், இயற்கைக்கு மேம்பட்ட காரியங் களை வியாக்கியானம் செய்ய முடியாது; ஜோதிடர்கள் மற்றும் குறிசொல்பவர்களாலும் ஒருபோதும் சுவற்றில் எழுதப்பட்ட அந்தக் கையெழுத்துக்களை வாசிக்க முடிய வில்லை. அதைச் செய்வதற்கு ஆவியில் நிரம்பிய ஒரு மனிதன் அவசியம். அந்த ஜோதிடர்கள் அந்த அந்நிய பாஷையை வாசிக்க முடியவில்லை. இயற்கைக்கு மேம்பட்டவைகளை அறிந்துகொள்வதற்கு, அதை வியாக்கி யானப்படுத்தும் வரத்தை அவர்கள் கொண்டிருக்கவில்லை. ஆகவே, அவைகள் எல்லாம் என்ன என்பதை அவர்கள் அறிந்திருக்க முடியவில்லை.

21. இன்றைக்கு இருக்கிற உலகமும் அவ்விதமாக இருக் கிறது. அவர்கள் ராக் அண்ட் ரோல் நடனக் குழுக்களோடு நடனம் ஆடிக்கொண்டு அவர்கள் காலத்தை விரயம் செய்துகொண்டிருந்தார்கள், பெரிய நடனத்துடன் கூடிய களியாட்டு அவர்களுடைய சபையில் நடந்துகொண்டிருந் தது, குளிர்ந்துபோன, பாரம்பரியமான பிரசங்கங்கள் மலர் களை குறித்தும், மற்றும் இதைக்குறித்தும், அதைகுறித்தும் உண்டாயிருந்தது, சுவிசேஷம் புறக்கணிக்கப்பட்டது. இயற்கைக்கு மேம்பட்டவைகளைக்குறித்து அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது. இந்த பொருளில் நீங்கள் அவர் களிடம் பேசக்கூடும், ஒட்டுமொத்தமாக, கர்த்தருடைய வருகையைக்குறித்த செய்தி எல்லா இடங்களிலும் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும், அவர்கள் அதை பரிகாசம் செய்து நகைப்பார்கள், அதுவே தேசங்களுக்கு மிகத் தேவையான செய்தியாகும்.

22. ஆனால் ஆவிக்குரிய ஜனங்கள், மறுபடியும் பிறந்த வர்கள், ஏதோ ஒன்று சம்பவிக்கப் போகிறது என்பதை அறிவார்கள், மேலும் அதைக்குறித்து அவர்கள் மிகவும் சந்தோஷப் படுவார்கள். ஏனென்றால், அது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இரண்டாவது முறையாக அவருடைய

சபைக்காக வருகிறதைக் குறிக்கிறது. ஆனால் இரட்சிக்கப் படாதவர்கள், இவைகள் எல்லாம் என்ன என்பதை அறியமாட்டார்கள். அது இயற்கைக்கு மேம்பட்ட ஒரு அசைவாக இருக்கிறது.

23. கடந்த இரண்டு வருடங்களாக மகத்தான கூட்டங் களை நடத்துவதற்கான சிலாக்கியத்தை பெற்றேன். அவை களில் ஒன்று இந்தியாவில், பம்பாய் (Bombay) என்னும் இடத்தில் கூட்டம் நடத்துவதற்குக் கர்த்தர் அனுமதித்தார். நான் அங்கு சேர்வதற்குமுன், அவர்களின் தேசத்தைக் குறித்து அதிகம் படித்தேன், மேதிய-பெர்சியர்கள், இராஜா வாகிய பெல்ஷாத்சாரின் ஆளுகைலிருந்து பாபிலோன் தேசத்தைக் கைப்பற்றியபோது, அவர்களின் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே போய் குடியேறிவிட்டார்கள் என்றும் அவர்களே இந்நாட்களில் இந்துக்கள் என்று அழைக்கப்படுகிறார்கள் என்றும் கண்டேன்.

24. அதன்பிறகு அவர்களுடைய செய்தித்தாள்களை வாசித்தேன் (அவைகளை வெட்டி எடுத்து இன்றும்கூட என்னிடத்தில் வைத்திருக்கிறேன்), ஏதோ ஒன்று என்னைத் திடுக்கிட செய்தது. நான் அவைகளை வாசித்தபோது, அதில் ஏதோ கவனத்தில் கொள்ள வேண்டிய ஆவிக்குரிய காரியம் காணப்படுகிறது, நான் அதை இருதயத்தில் காத்துக்கொள்ள விரும்புகிறேன், அதில் ஏதோ பொருள் இல்லாமல் தேவன் ஒருபோதும் அசைவாடுவதில்லை. அவர்களுடைய செய்தித்தாளை வாசித்துக் கொண்டி ருந்தேன், ஒரு மிகப்பெரிய பூமி அதிர்ச்சி உண்டான தாகவும் அது தேசத்தின் பெரும் பகுதியை அசைத்தது என்றும் அவர்கள் கூறினார்கள்; இரண்டு வருடத்திற்குமுன் நீங்கள்கூட உங்களுடைய சொந்த அமெரிக்கச் செய்தித் தாளில் அதை வாசித்திருப்பீர்கள். ஏனென்றால் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன், பூமி அதிர்ச்சி தாக்கியது, ஒரு மகத்தான மாற்றங்கள் நடந்தன, அது

என்னவென்றால் எல்லா ஆடுகளும், மாடுகளும் வழக்கமாக கட்டிடங்களின் சுவரை ஒட்டித் தங்கும்... என்று அதில் சொல்லப்பட்டிருந்தது...

25. இந்தியாவில் வேலி அமைப்பதற்குப் பதிலாக, அவர்கள் மதில் சுவர்களைக் கொண்டுள்ளனர். கால்நடைகளை அடைக்கும் பண்ணைகளையும், தானியங்கள் சேமித்து வைக்கும் களஞ்சியங்களையும் கற்களினால் கட்டுகிறார்கள், அப்படிப்பட்டவைகள் அநேகமாய் இருக்கின்றன. அங்கே கால்நடைகள் மதில்சுவர்களைச் சுற்றியுள்ள நிழல்களில் நிற்கும், ஆனால் பூமி அதிர்ச்சி உண்டாவதற்கு முன், எல்லா மாடுகளும், ஆடுகளும் மேய்ச்சல் தரையின் மத்தியில் இருந்து புறப்பட்டுவிட்டன. சிறிய பறவைகள் கல் சுவர்களின் இடுக்குகளில் தங்களுடைய கூடுகளை அமைத்துத் தங்கியிருந்தவைகள், அங்கிருந்து பறந்து காடுகளுக்குள் சென்றுவிட்டன. ஏனென்றால், சுவர்கள் இடிந்து அவைகள்மேல் விழுந்துவிடும்.

26. அவைகளை அங்கிருந்து துரத்துவதற்கு யாரும் கிடையாது. பூமி அதிர்ச்சி வரப் போகிறது என்பதை வெளிப்படையாக காட்டுவதற்குரிய எந்த அடையாளமும் இல்லை. ஆனால் தேவன் அவருக்குச் சொந்தமானவற்றை குறித்து அக்கறையுள்ளவராக இருக்கிறார், அந்த உபத்திரவத்திலிருந்து வெளியே செல்வதற்கு பரிசுத்த ஆவியானவர் அவைகளுக்கு உணர்த்துகிறார்.

27. தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன், இத்தகைய மிகப்பெரிய அழுத்தம் வருகிறது என்பதை உணர்கிறான், அவன் பாதுகாப்பான இடத்திற்குச் செல்ல வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. ஆனால் அவர்கள் அதைச் செய்ய மாட்டார்கள். அவர்கள் கேட்க மாட்டார்கள். ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு இரவிலும் தேவனுடைய சத்தம் எச்சரித்துப் பேசிக்கொண்டே

இருந்ததாலும், ஆனால் மனிதர்கள் பாவத்தில் வாழ்ந்து கொண்டிருக்கவே விரும்புகின்றனர்.

28. நாம் நினைப்பதற்கும் மேலாக காலம் கடந்து போயிருக்கும், அதை நீங்கள் அறியவேண்டும். தங்களுக்கு இன்னும் அதிக காலம் இருக்கிறது என்று ஜனங்கள் நினைக்கிறார்கள், ஆனால் அது நாம் நினைப்பதற்கு மேலாக காலதாமதம் ஆகியிருக்கும் என்று வேத வாக்கியங்கள் பிரகடனப்படுத்துகின்றன. "நோவாவின் காலத்தைப்போல மனுஷகுமாரனுடைய நாட்களும் இருக்கும் என்றும் லோத்தின் நாட்களில் நடந்தது போலவும் மனுஷகுமாரனின் வருகையின் நாட்களிலும் நடக்கும்" என்றும் இயேசு கூறினார்.

29. "நோவாவின் நாட்களிலும், லோத்தின் நாட்களிலும் நடந்த நியாயத்தீர்ப்பும், அதைத் தொடர்ந்து பேரழிவும் ஏற்பட்டபோது என்ன நடந்தது என்று நாம் பார்ப்போம். அவைகள் இரண்டும், மூன்றாம் அழிவுக் காலத்தோடு இணைக்கபட்டுள்ளது. அந்நாட்களில் நடந்தது போலவே மனுஷகுமாரன் வரும் நாட்களிலும் - இரண்டாவது முறையாக வரும்போது அவ்விதமே நடக்கும்" என்று இயேசு கூறினார், அப்பொழுது எவ்வாறு நடந்ததோ, அதுபோலவே இருக்கும்.

30. நோவாவின் நாட்களில், அந்த சமயம் மட்டுமல்ல, ஆனால் லோத்தின் நாட்களிலும், இரண்டும் சந்திக்கும் நேரங்களைப்போல, இப்படிப்பட்ட நேரத்தில், தேவன் இரக்கத்தின் அழைப்பை அனுப்புகிறார் என்று நாம் கற்பிக்கப்பட்டுள்ளோம்.

31. ஜலப்பிரளயத்தினால் உண்டான பேரழிவிற்கு முந்தைய நாட்களில் தேவன் பூமிக்கு ஏனோக்கு என்னும் தீர்க்கதரிசியை அனுப்பினார். அவர் ஒரு தூதனை அனுப்பினார், அவர் ஒரு செய்தியை அனுப்பினார், அவர் இயற்கைக்கு மேம்பட்டவைகளைச் செய்தார். ஆனால்

மனிதன் என்ன செய்தான்? அவர்கள் புசித்தார்கள், அவர்கள் குடித்தார்கள், அவர்கள் நட்டார்கள், கட்டினார் கள்; செய்தியின் அழைப்பைப் புறக்கணித்தார்கள், லோத்து மற்றும் நோவா இவர்கள் ஒவ்வொருவரின் செய்தியிலும் கிருபை, இரக்கம் மற்றும் விடுதலை இவைகள் அடங்கி யிருந்தது. கிருபை, தேவனுடைய ஜனங்களுக்கான இரக்கம், கிருபையின் மூலமாக அளிக்கப்பட்டது மற்றும் விடுதலை ஜனங்களுக்கு வழங்கப்பட்டது, ஆனால் அவர்களோ அதைத் நிராகரித்தனர். அவர்கள் என்ன செய்தார்கள் என்பதைப் பார்க்கிறோம்? சிரித்தார்கள், ஏளனம் செய் தார்கள், பரிகசித்தார்கள், பெண் கொண்டு, விபச்சாரத்தில் வாழ்ந்தார்கள், கட்டிடங்களை கட்டினார்கள், நட்டார்கள்.

32. இன்றுள்ள கட்டிட அமைப்புகளை பாருங்கள். இங்குகூட நான் ஒன்றை கூறட்டும்; விஞ்ஞான உலகத்தின் முன்னேற்றத்தைக் கவனியுங்கள், இப்பொழுது, நான் இதைக் கூறுகிறேன், அவதூறு ஏற்படுத்துவதற்கோ அல்லது உணர்வுகளை புண்படுத்தவோ நான் இதைக் கூறவில்லை; இது சத்தியமாக இருப்பதால் இதைக் கூறுகிறேன். ஆனால் இவ்விதமான கிரியைகள் எதிர்பக்கத் திலிருந்து வருகிறது. காயீனின் புத்திரர்கள் மகத்தானதும், பிரம்மாண்டமான கட்டிடங்களைக் கட்டினார்கள், சிறந்த விஞ்ஞானிகளாய் இருந்தார்கள், இரும்பு மற்றும் உலோகங் களை முறுக்கேற்றி உறுதியான கட்டிடங்களாக்கினார்கள். அந்த மகத்தான விஞ்ஞான உலகம் மிகவும் பக்திவாய்ந்த வர்களாய் இருந்தார்கள், ஆனால் அவர்கள் காயீன் வழி வந்தவர்களே.

33. ஆனால் சேத்தின் வழி வந்தவர்கள் ஏழை களாகவும், தாழ்மையுள்ள விவசாயிகளாகவும், தேவனை விசுவாசிக்கிறவர்களாகவும் இருந்தார்கள். தீர்க்கதரிசி பிரசங்கித்த போது அதை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். இயற்கைக்கு மேம்பட்டவைகளை செய்தபோது, அதை

அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். விடுதலை அவர்களுக்கு வழங்கப்பட்டபோது, அதை அவர்கள் ஏற்றுக்கொண்டார் கள், ஏற்றுக்கொள்ளாத மற்றவர்கள் தேவனாகிய கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகளில் அழிந்துபோனார்கள்.

34. அவர்கள் தங்களை புத்திசாலிகள் என்று எண்ணிக் கொண்டபடியால், அவர்கள் விரும்பும் எந்த ஸ்திரியுடனும் வாழலாம், குடிக்கலாம் அதில் யாரும் தலையிட முடியாது என்றும் எண்ணினார்கள். ஆனால் தேவன் பாவத்தை வெறுக்கிறார், அதை தேவன் நியாயந்தீர்க்காமல் விட்டு விடமாட்டார். அவிசுவாசியை அழித்துப் போட்ட அதே காரியம்தான் விசுவாசிகளைப் பாதுகாத்தது. தண்ணீரினால் உண்டான நியாயத்தீர்ப்பு.

35. அவிசுவாசியை அழித்துப்போட்டது, அதே தண்ணீர்தான் நோவாவை பாதுகாப்பாக கொண்டு சேர்த்தது. சுவிசேஷ செய்தி அவிசுவாசியை அழிக்கும், அதே சுவிசேஷ செய்தி நியாயதீர்ப்பு தாக்குவதற்கு முன்னால், அது சபையை எடுத்துக்கொள்ளப்படுதலில் கொண்டு செல்லும். அவர்கள் பாதுகாப்பான இடத்திற்கு தூக்கி சுமந்து செல்லப்படுவார்கள்.

36. “உலகம் முழுவதும் சென்று சகல சிருஷ்டி களுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்” என்று இயேசு கூறினார். இவைகளுக்கு பின் முடிவு சம்பவிக்கும் சுவிசேஷம் உலகத்தை சென்றடையும்போது, முடிவு வரும் என்று நம்முடைய ஆசீர்வதிக்கப்பட்ட இரட்சகர் சொன்னார்.

37. இப்பொழுது நீங்கள் உலகம் முழுவதிலும் கைப்பிரதிகளைக் கொடுத்தபோது அல்லது உலகத்திற்கு வேதாகமங்களை அனுப்பினபோது அல்லது உலகத்திற்கு மிஷனரிகளை அனுப்பினபோது என்று அவர் ஒருபோதும் கூறவில்லை, ஆனால் இந்த சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும் போது என்று கூறினார். அப்படியென்றால் சுவிசேஷம்

என்றால் என்ன? “சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத் தோடே மாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியின் கிரியை நடப்பித்தலோடும் வந்தது” என்று பவுல் சொன்னார், பரிசுத்த ஆவியானவர் வார்த்தையை ரூபகாரப் படுத்துகிறார். அதற்கு அடுத்த வசனத்தை தொடர்ந்து வாசிப்பீர்களேயானால், அவர் சொல்லும்பொழுது, “உலக மெங்கும் சென்று சர்வ சிருஷ்டிகளுக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள்” என்று அவர் சொன்னார். “விசுவாசிக்கிற வர்களை இந்த அடையாளங்கள் பின்தொடரும், இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் உங்களுடனேகூட இருக்கிறேன்,” என்றும் அவர் தாம் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் என்பதை வெளிப்படுத்துவார்” என்றும் கூறினார்.

38. அநேக நேரங்களில் இந்தச் செய்தியை நாம் கொண்டுசெல்ல முயற்சிக்கும்போது, லோத்து அவருடைய உறவினர்களுக்கு செய்தது போலவே காணப்படுகிறது. நாம் அவர்களை பரிகாசம் செய்வதுபோல் அவர்களுக்கும் காணப்படுகிறது அல்லது அந்த வார்த்தைகள் வெற்று உதவாத வார்த்தைகளாய் அவர்களுக்கு காணப்படுகிறது. அவர்களுடைய மேய்ப்பர்கள் இந்த மகத்தான விடுதலை யின் செய்தியை தாண்டி கடந்து செல்கிறார்கள் அல்லது வரப்போகும் வேறு ஒரு சந்ததியினரிடம் விவரித்துக் கூற முயற்சிக்கிறார்கள். ஆனால் அதில் இருக்கும் உண்மை என்னவென்றால், வார்த்தையை நிரூபிக்கவும், பரிசுத்த ஆவியின் வல்லமையை வெளிப் படுத்தவும், கர்த்தருடைய தூதன் பிரசன்னமாயிருக்கிறார். ஆகவே இந்த அடை யாளங்கள் பின் தொடரும்.

39. அவர்கள் பரியாசம் செய்ய முயற்சித்தார்கள், லோத்துவிடம் அவர்கள் சொன்னார்கள்… ஏன், லோத்தை அவர்கள் கேலி செய்தார்கள், அவருடைய சொந்த இனத்தாரே அவ்வாறு செய்தார்கள். லோத்து ஒரு

நீதிமானாக இருந்தான். அவர்களுடைய பாவங்கள், தாறு மாறாக்கப்பட்ட ஜீவியம் இவைகளைக் கண்ணுற்றபோது, தன்னுடைய இருதயத்தில் வாதிக்கபட்டான் என்று வேதாகமம் கூறுகிறது.

40. மேலும் இந்த தேசமும் அதுபோலவே பாவத் தினால் நிரம்பி இருக்கிறது, மனித சரீரத்தை தவறாகப் பயன்படுத்துகிறார்கள். அது வெறியாட்டமும், மது அருந்து தலும், சட்டவிரோதமான போதை மருந்து உட்கொள்வதும், இளம் குற்றவாளிகளாகவும், சிறார் குற்றங்களும் சரியாக அப்போது இருந்தது போலவே இப்போதும் இருக்கிறது. மனிதர்கள் அதைக் கேலி பரிகாசம் செய்கிறார்கள். தேவனாகிய கர்த்தருடைய இயற்கைக்கு மேம்பட்ட அடையாளங்களை அவர்கள் காணும்போது, நாம் அவர் களின் மார்க்கத்தை பரிகாசம் செய்கிறோம் என்று சொல்ல முயற்சிக்கிறார்கள்.

41. சில நாட்களுக்கு முன்பு, யாரோ ஒருவர் சொன்னார், ஒரு சிறந்த இறையியல் முனைவர் எனக்கு ஒரு கடிதம் எழுதினார், "திரு.பிரன்ஹாம், தெளிவடையும் நீர் கர்த்தராகிய இயேசு போலவே பாவனைசெய்து ஆள்மாறட்டும் செய்ய முயற்சிக்கிறீர்" என்றும் "நீர் போலி யான ஒன்றைச் செய்கிறீர்" என்றார்.

42. அது மனிதனால் செய்ய முடியாது என்பதை இந்த சிறிய தளர்வுற்ற பரிதாபமான மனிதன் எப்படி அறிவார். அது கடைசிக்காலத்தின் அடையாளம், அதை அவர் நிறைவேற்றுகிறார்.

43. ஆனால் லோத்தை அவர்கள் ஏளனம் செய்தார்கள். "ஓ. அவருடைய வார்த்தைக்குச் செவி கொடுக்காதீர்கள். அந்த மனிதன் ஒரு பைத்தியக்காரன். இவ்வளவு பெரிய மகத்தான இடம் எப்படி அழிக்கப்படும்?" பூமியில் அறியப்பட்ட பெரிய பட்டணங்களில் சோதோம் மற்றும்

கொமோரா பட்டணங்கள் எவ்வாறு அக்கினியாலும் மற்றும் கந்தகத்தினால் அழிக்கப்பட்டுப் போகும்?

44. “உலகம் எவ்வாறு எரிந்து போகும்? என்றும் எவ்வாறு உலகம் அழிக்கப்பட்டு போகும்?” என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

45. எனக்கு மிகவும் அன்பான சகோதரனே, பூமி உண்டாகக்கடவது என்று சொல்லி பூமியை உருவக்கின அதே தேவனுடைய வார்த்தை அவளை காட்சியிலிருந்து நீக்கிபோடும். கர்த்தருடைய வார்த்தையினால், ஆமென். அதுதான் உண்மை. இந்த நிர்பாக்கியமுள்ள, தரித்திரமுள்ள, பரிதபிக்கக்கூடிய, குருடான, நிர்வாணமாய் இருக்கிற இந்த தேசத்தின் மீது தேவன் இரக்கமாய் இருப்பாராக.

46. “நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும் பரிதபிக்கப்படதக்க வனும் தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாய் இருக் கிறதை அறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவிய சம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லை யென்றும் சொல்லுகிறாய் என்று வேதாகமம் கூறவில்லையா. என்ன ஒரு பரிதாபமான நிலை.

47. என் சிந்தையில் வருகிற ஒன்றை சற்றுநேரத்திற்கு நீங்கள் கவனிக்க வேண்டும் என்று விரும்புகிறேன், அது சோதோம், கோமரா அழிவதற்கு முன்பு, தேவன் ஆபிரகாம் என்னும் ஒரு தீர்க்கதரிசியை மலையின் உச்சியில் கொண்டிருந்தார் என்பதை நாம் கண்டோம். அவர் அந்தத் தீர்க்கதரிசிக்கு ஒரு வாக்குத்தத்தம் கொடுத்தார், கடினமான பாதையைத் தெரிந்துகொள்ள அவருக்கு விருப்பமாய் இருந்தது, உண்மையும் சத்திய முமான வார்த்தையை பிரசங்கித்தார், பாவத்தில் வாழ்வதைவிட அதுவே சிறந்தது என்று கண்டார். இந்த மிகப்பெரிய பயங்கரமான அழிவு வருவதற்கு சற்று முன்பு கர்த்தருடைய தூதன் அவரைச் சந்தித்தார்.

48. இப்பொழுது நீங்கள் கவனிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். நோவாவின் நாட்களில் அது தண்ணீராக இருந்தது. சோதோம், கொமோராவின் நாட்களில் அது அக்கினியாக இருந்தது. இந்த முறை அது அக்கினியாக இருக்கும் என்று தேவனுடைய மகாபரிசுத்தமுள்ள வார்த்தையினால் நாம் போதிக்கப்பட்டிருக்கிறோம்.

49. வேதம் பேசுகிறதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். சாராள்... ஏறக்குறைய நூறு வயது ஆபிரகாம், 99 வயதுடையவனாய் இருந்தான், அப்படி யானால் சாராள் 89 வயது உடையவள். அவளுக்கு பல வருடங்களுக்கு முன்பாகவே ஸ்திரிகளுக்குரிய வழிபாடு நின்று போயிருந்தது, ஆனாலும் ஆபிரகாம் வாக்குத்தத்தைப் பிடித்துக்கொண்டிருந்தான், ஏனென்றால் தேவன் அவருடைய வாக்குதத்தத்தை நிறைவேற்ற வல்லவராய் இருக்கிறார் என்று அவன் அறிந்திருந்தான். அவன் விசுவாசம் உள்ளவனாய் இருந்தான். தேவன் அவனிடத்தில் பேசின வார்த்தையில் அவன் தரித்திருந்தான்.

50. அவ்வாறுதான் நீங்கள் வார்த்தையில் தரித்திருக்கும் போது தூதர்கள் ஜனங்களிடத்தில் தோன்றுகிறார்கள். மனிதர்களால் உண்டாக்கப்பட்ட இறையியல் கோட்பாடு களில் அல்ல, ஆனால் அது வார்த்தையினால் உண்டா கிறது, கர்த்தர் உரைக்கிறதாவது, அந்தச் சமயத்தில்தான் தூதர்கள் தோன்றுகிறார்கள்.

51. ஆபிரகாம் வார்த்தையில் தரித்திருந்தான். ஒருநாள் அவன் கர்வாலி மரத்தின் கீழ் உட்கார்ந்து கொண்டிருக்கும் போது, மூன்று மனிதர்கள் வந்து கொண்டிருப்பதைக் கண்டான். அவன் ஆவிக்குரியவனாய் இருந்தபடியினாலே, தேவன் எப்பொழுதும் தேவனாகவே இருக்கிறார் என்பதை அறிந்திருந்தான். இந்த மனிதர்கள் காட்சியில் தோன்றின போது, அவர்களைச் சந்திக்கும்படி ஓடினான், மேலும்,

அவன், “ஐயன்மீர், சற்றுநேரம் தரித்திருங்கள், உங்கள் கால்களைக் கழுவிக்கொள்ள நான் தண்ணீர் கொண்டு வரட்டும்; மேலும் நாங்கள் சிறிது அப்பமும் ஆயத்தம் செய்வோம், அதன்பின்பு உங்களைத் திடப்படுத்திக் கொண்டு, உங்கள் வழியே போகலாம். இதற்காகவே நீங்கள் வந்தீர்கள்” என்றான்.

52. “இதற்காகவே அடியேன் இடம்வரைக்கும் வந்தீர்கள்” நேரமிருந்தால் அந்த வார்த்தைகளைக் குறித்து பேச வாஞ்சிக்கிறேன்.

53. ஆகவே சிறிதளவு ஆகாரம் ஆயத்தமாக்கப்பட்டு விட்டது, ஆபிரகாம் எழுந்து நின்று, இந்த மனிதர்கள் உண்பதைக் கவனித்துக்கொண்டிருந்தான், அந்தத் தூதனின் முதுகுப்பக்கம் கூடாரத்தின் பக்கமாய் திரும்பி இருந்தது, சாராள் கூடாரத்தின் உள்ளே இருந்தாள்.

54. அந்தத் தூதனின் தன்மையைக் கவனியுங்கள், அழிவுக்கு முன்பாகக் கடைசி செய்தியைக் கொண்டு வந்தார். “ஆபிரகாமே, உனக்கு கொடுத்த வாக்கை நான் காத்துக்கொள்ளப் போகிறேன்” என்று அவர் சொன்னார். அதை நான் நேசிக்கிறேன். அது நம்முடைய பிதாவாகிய தேவன். “நான் உனக்கு கொடுத்த வாக்கைக் காத்துக் கொள்வேன். ஒரு உற்பவ காலத்திட்டத்தில், அடுத்த 28 நாட்களில், நான் உன்னைச் சந்திக்கப்போகிறேன். அந்தக் குழந்தைக்காக இந்த 25 ஆண்டுகள் காத்திருந்தாய், அதை நீ பெற்றுக்கொள்ளப்போகிறாய்.”

55. அந்த பரிதாபமான சின்ன சாராள் விசுவாசத்தில் பலவீனம் உள்ளவள், ஆனால் அவர்களுடைய நாட் களிலே, மனிதன் செய்துகொண்ட விருத்தசேதனத்தின் மூலமாக, ஸ்திரியானவள் உடன்படிக்கைக்குள், வாக்குத் தத்திற்குள் கொண்டுவரப்பட்டாள், ஏனென்றால் தேவனுக்கு முன்பாக விருத்தசேதனம் ஒன்றினால் மட்டுமே அடையாளம் கண்டுகொள்ளப்பட்டிருந்தார்கள். ஸ்திரிகள்

விருத்தசேதனம் செய்து கொள்ள இயலாது, ஆகவே அவளுக்குப் புருஷனே பாவ நிவாரணமாக இருக்கிறான், ஏனென்றால் இருவரும் ஒன்றாய் இருக்கிறார்கள். அந்த நேரத்தில் ஆபிரகாமின் விசுவாசம் சாராளைக் காத்துக் கொண்டது.

56. சாராள் தூதருக்குப் பின்புறத்தில் உள்ள கூடாரத்தில் இருந்தாள், அப்பொழுது தூதன், "சாராள் ஒரு குழந்தை யுடன் இருப்பாள்" என்று தூதன் சொன்னார். சாராள் தன் இருதயத்திற்குள் நகைத்தாள். வெளிப்படையாக சத்தம் போடவில்லை, அவள் தன் இருதயத்தில் சிரித்தாள். தூதனுடைய முதுகுப்புறம் கூடாரத்தின் பக்கமாகவும், ஆபிரகாமின் முகத்தை பார்த்து, "ஏன் சாராள் நகைத்தாள்?" என்று கேட்டார்.

57. அது எப்படிப்பட்ட உள்ளத்தைப் பகுத்தறிதலாக இருந்தது? அவள் கூடாரத்திற்குள் இருந்தாள், அவருக்குப் பின்புறமாக இருந்த கூடாரத்தினுள் இருந்த அவளின் எண்ணங்களை அவர் எவ்வாறு பகுத்தறிந்தார். வேத வசனங்கள் அதை எவ்வாறு தெளிவுப்படுத்துகின்றன என்பதை உங்களால் காண முடிகிறதா? அது அழிவிற்கு முன்பு கொடுக்கப்பட்ட கடைசி எச்சரிப்பின் செய்தியாக இருந்தது. உங்கள் கண்களைத் திறந்து பாருங்கள். அவருக்குப் பின்னால் இருந்த கூடாரத்தினுள், அதுவும் சத்தம் வெளியே கேட்கவில்லை, ஆனால் இருதயத்தில், அவள் என்ன செய்தாளோ அதைக் கர்த்தருடைய தூதன் பகுத்தறிந்தார். "அவள் ஏன் நகைத்தாள்?"

அவள் அழைக்கப்பட்டாள். அவள் நடுக்கம் கொண்டாள், பதறினாள். "நான் நகைக்கவில்லை" என்று அவள் சொன்னாள்.

"ஓ, ஆம், நீ நகைத்தாய்." வானத்தில் இருந்து அக்கினி விழுவதற்குமுன் கடைசி செய்தியை கொண்டுவந்த தூதனாய் இருந்தார்.

58. “சோதோம் மற்றும் கொமோராவின் நாட்களில் நடந்தது போலவும், பரலோகத்திலிருந்து மனுஷ குமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும்” என்று இயேசு சொன்னார். செய்தியைப் பார்த்தீர்களா? “பரலோகத் தில் இருந்து மனுஷகுமாரன் வெளிப்படும் போது...”

59. இப்பொழுது, இந்தத் தூதன் சோதோமுக்குச் சென்று ஒரு மனுஷன் மூலமாக அவருடையச் செய்தியை தொடங்கினபோது, அவரைக் கிண்டல் செய்தார்கள், அவரை பரிகாசம் செய்து நகைத்தார்கள், அவர்களால் செய்தியை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இன்றும் அதையே அவர்களும் செய்தனர். அதே காரியம் தான், அதை அவர்கள் நம்பமாட்டார்கள். ஒரே ஒரு காரியம் தான் விடப்பட்டிருக்கிறது, அது நியாயத்தீர்ப்பே.

60. ஆனால் கவனியுங்கள், அவர்கள் அதுபோல்தான் இருப்பார்கள் என்று வேதாகமம் கூறுகிறது. தீமோத் தேயுவிற்கு எழுதின இரண்டாம் நிருபம் மூன்றாம் அதிகாரத்தில், அவர்கள் அவ்வாறு இருப்பார்கள் என்று வேதம் கூறுகிறது. கடைசி நாட்களில் என்று ஆவியானவர் அழுத்தமாகப் பேசுகிறார்.” அது நேரடியாக அந்நாளுக் கென்று கொடுக்கப்படவில்லை, ஆனால் அது கடைசி நாட்களுக்கென்று கொடுக்கப்பட்டது. “மனுஷர்கள் தற்பிரி யராயும், அகந்தையுள்ளவர்களாகவும், தொலைக்காட்சி பிரியராகவும், உலகம் மற்றும் அதனுடன் சேர்ந்த காரியங் கள் மேல் பற்று உள்ளவர்களாகவும் இருப்பார்கள்.” தேவபிரியராயிராமல் சுகபோகபிரியராயும் இணங்காதவர் களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், நல்லோரை பகைகிறவர்களாயும் இருப்பார்கள். “சகோதரன் பிரன்ஹாம், அது கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள். அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்களாக இருப்பார்கள்” என்று நீங்கள் கூறலாம்.

61. அது கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்ளுகிற அமெரிக்கர்கள்தான்: “தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதன் பலனை மறுதலிக்கிறவர்களா கவும் இருப்பார்கள்”. அது சுவிசேஷத்தின் இயற்கைக்கு மேம்பட்ட காரியம், அப்படிப்பட்டவர்களை விட்டு, அப்படிப்பட்டவர்களின் வீடுகளை விட்டு விலகு, அப்படிப்பட்டவர்களை விட்டு திரும்புங்கள். ஏனென்றால் இவர்களே வீடு வீடாய் நுழைகிறார்கள் ஒருவகை, சங்கங்கள், இப்படிப் பல, பாவங்களால் நிறைந்து பற்பல இச்சைகளால் இழுப்புண்டு உணராதவர்களாகிய பெண் பிள்ளைகளை வசப்படுத்தி கொள்ளுகிறார்கள். எல்லா வகையான களியாட்டங்களில் பங்குபெறுவது.

62. மேலும், “என்னுடைய சபை இதைச் செய்கிறது, மேலும் எங்களுக்கு அதிகமான நேரம் இருக்கிறது,” ஆனால் பரிசுத்த ஆவியைத் தேடுவதற்கு நேரம் இல்லை, தேவனுடைய எண்ணம், சிந்தை இவைகளை தேடுவதற்கு நேரம் இல்லை. அவர்கள் அதை மறுதலிக்கிறார்கள். நேரமில்லை!

63. ஆனால் நீங்கள் லோத்தை மற்றும் நோவாவை யும்கூட கவனிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். மழை ஒரு துளிகூட ஒருபோதும் பெய்யாத நிலையில், வந்துகொண்டிருக்கிற நியாயத்தீர்ப்பின் மேகத்தில் இருந்து, ஒரு துளி ஈரம்கூட வருவதற்குமுன்,... நாம் கடந்த இரவில் வாசித்ததுபோல, நான் உண்மையாக நம்புகிறேன், சுவி சேஷத்தின் மூலமாக தேவனுடைய கையெழுத்தை சுவரில் நாம் பார்க்கிறோம். சிந்தை தெளிவுள்ளவர்கள் எவரும் சிலமணி நேரங்களே விடப்பட்டிருக்கிறது என்றும் ஒருவேளை இது கடைசி ஒன்றாகக்கூட இருக்கலாம் என்பதையும் பார்க்க முடியும். ஆனால் நியாயத்தீர்ப்பின் தண்ணீர் ஒரு துளி விழுவதற்குமுன், நோவா பேழைக்குள் சென்றுவிட்டார்.

64. “சர்வலோக நியாயாதிபதி துன்மார்க்கரோடே நீதிமான்களையும் அழிப்பீரோ?” என்று ஆபிரகாம் தூதனிடம் கூறவில்லையா. நிச்சயமாக அழிக்கமாட்டேன். பூமி அனைத்திற்கும் நியாயாதிபதியாய் இருப்பவர் நீதியாய் நியாயம்தீர்ப்பார்.

65. வானத்திலிருந்து ஒரு சிறு தீப்பொறி வருவதற்கு முன்னமே, லோத்து சோதோமைவிட்டு வெளியேற்றப் பட்டான் என்பதைக் கவனியுங்கள்.

66. “நோவாவின் நாட்களில் நடந்தது போலவும், லோத்தின் நாட்களில் நடந்தது போலவும், தேவனுடைய குமாரன் வரும்போது நடக்கும்” என்று இயேசு கூறினார். அந்தக் கையெழுத்து சுவரில் இருக்கும் என்றால், நியாயத்தீர்ப்பு சமீபத்தில் இருக்கும் என்றால், சபை எடுத்துக்கொள்ளப்படுவதும் எவ்வளவு சமீபத்தில் இருக்க வேண்டும்? இன்றிரவு அது எவ்வளவு சமீபமாய் உள்ளது? சிந்தித்து பாருங்கள்.

67. நோவா பாதுகாப்பிற்காகப் பேழைக்குள் சென்றார். லோத்து சோதோமைவிட்டு வெளியேறினார். ஒருவர் வெளியே வந்தார், மற்றொருவர் உள்ளே சென்றார். ஒன்றுடன் ஒன்று இணையும்போது, அவைகள் எதற்குச் சாயலாக இருக்கிறது? அது தப்பிக்கொள்ள உலகத்தை விட்டு வெளியே வந்த சபைக்குச் சாயலாக இருக்கிறது, மேலும் மகிமையில் செல்வதற்காக கிறிஸ்து என்னும் பேழைக்குள் செல்வதற்கும் சாயலாக வைக்கப்பட்டது. ஒருவர் வெளியே வந்தார், மற்றொருவர் உள்ளே சென்றார். ஒருவர் உலகம் அழிந்துபோவதிலிருந்து, உலகத்தோடு அழிந்துபோகாதபடித் தன்னைக் காத்துக்கொள்ள வெளியே வந்தார், மற்றொருவர் தப்பிக்கொள்ள பேழைக்குள் சென்றார், கிறிஸ்துவே பாதுகாப்பான பேழையாக இருக்கிறார்.

68. இதை நினைவு வைத்துக்கொள்ளுங்கள். கல் மழை, அக்கினி மற்றும் இருளினால் உண்டான நியாயத்தீர்ப்பு எகிப்தை சூழ்ந்துகொள்வதற்கு முன்னரே, இஸ்ரவேல் ஜனங்கள் கோசேனுக்குள் பிரவேசித்தார்கள், அங்கே வெளிச்சம் இருந்தது. எகிப்தியர்களோ இருளில் அலைக் கழிக்கபட்டனர்.

69. புருஷர்களே மற்றும் ஸ்திரிகளே, இப்பொழுது என் வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள். பெருந்துயரமும் வருத்தமும், புற்றுநோய், பாவம் நிறைந்த இப்பூமியில் நீங்கள் கைவிடப்படுவதற்கு முன்பாக, எவ்வளவு துரிதமாய் உங்களால் ஓட முடியுமோ அவ்வளவு துரிதமாய் வெளிச்சம் இருக்கும் இடத்திற்கு ஓடுங்கள். (ஒலிநாடாவில் காலியிடம்-ஆசி.) வெளிச்சமாகிய கிறிஸ்து இயேசுவினிடம் ஓடி, இரக்கத்தின் செய்தியை ஏற்றுக்கொள்ளுங்கள்.

70. "துரிதமாய்" என்று தூதன் சொன்னார், "அங்கே ஓடித் தப்பித்துக்கொள்; நீ அங்கே போய்ச் சேருமட்டும் நான் ஒன்றும் செய்யக்கூடாது" நியாயத்தீர்ப்பு வரமுடியாது.

71. நம்மை முழங்கால்படியிடசெய்யும் அளவுக்கு ரஷ்யா ஏவுகணைகளைக் கொண்டுள்ளது. நாம் அவர் களைவிட ஐந்து ஆண்டுகள் பின்னுக்கு இருக்கிறோம் என்று நம்முடைய விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். அவர்கள் இன்று விஞ்ஞானத்தில் வளர்ந்திருக்கிறார்கள், அந்த நிலையை எட்டுவதற்கு நமக்கு ஐந்து ஆண்டுகள் ஆகும். நம்முடைய சிறிய ஸ்புட்னிக் (Sputnik) புகை எழுப்பியும், பயங்கர ஒலி எழுப்பியும் மூன்றடி உயரம் சென்று தரையில் விழுந்துவிடுகிறது. அவர்களுடையதோ உலகத்தைச் பலமுறை சுற்றுகிறது.

72. அது நமக்குச் சொல்கிறது என்ன? தேவன் அவருடைய சபைக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறார், "இங்கே வந்து விடுங்கள், நீங்கள் இங்கு வருமட்டுமாய் நான் ஒன்றும் செய்யக்கூடாது." ஒரு உண்மையான பரிசுத்த

ஆவி ஊற்றப்படுதலுக்காகவும், சபை மகிமை அடைவதற்காகவும், அவருடைய சபையானது ஸ்தாபனச் சுவர்களை உடைத்து ஒன்றுசேரவேண்டும் என்று தேவன் காத்துக் கொண்டிருக்கிறார். "நீங்கள் இங்கே வருமட்டுமாய் நான் ஒன்றும் செய்யக்கூடாது" என்று நாம் ஒன்றுசேர வேண்டும் என்று காத்துக் கொண்டிருக்கிறார்.

73. "மனுஷகுமாரன் பரலோகத்தில் இருந்து வெளிப்படும்போது" என்று இயேசு சொன்னார். இதைச் சொல்லி நான் முடிக்கட்டும்: மனுஷகுமாரன் இப்பொழுது பரலோகத்தில் இருந்து வெளிப்பட்டு கொண்டிருக்கிறார்.

74. சகோதரன் பிரன்ஹாமே, சற்றுநேரம் கழித்து அது வந்துவிடுமா?

75. அது இப்பொழுது இங்கு இருக்கிறது. இதை என்னுடைய சொந்த கூட்டத்தில் என் தனிப்பட்ட காரியத்தை கூறக்கூடாது என்று நான் நம்புகிறேன், ஆனால் தேவனால் அருளப்பட்ட உங்களுக்குள் இருக்கும் ஆவி, நான் எதைக்குறித்துப் பேசுகிறேன் என்பதை வாசிக்கக் கூடும். மனுஷகுமாரன் ஏற்கனவே மகிமையிலிருந்து இறங்கி வந்துவிட்டார், இரக்கத்தினால் கடந்த சில வருடங்களாக அவருடைய சபைக்குத் தம்மை வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறார், அவர்களுக்குத் தம்முடைய மகத்தான பிரசன்னத்தைக் காண்பித்துக்கொண்டிருக்கிறார், அவர் பூமியிலிருந்த பொழுது செய்த அதே கிரியைகளை இப்பொழுது செய்துகொண்டிருக்கிறார், அழிவிற்கு முன்பதாக, ஆபிரகாமுக்குத் தன்னை வெளிப்படுத்தினது போல தம்மை அவருடைய சபைக்கு வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். அது எள்ளி நகையாடப்படுகிறது. மேலும் அது இகழ்ச்சிக்குரியதாய்ப் பார்க்கப்படுகிறது.

76. அடுத்தமுறை அவர் தன்னை வெளிப்படுத்தும் போது, அது பூமியில் ஊற்றப்படப்போகும் நியாயத்தீர்ப்பாக இருக்கும். மேலும் தேவனை மறந்த தேசங்கள்,

கிருபையின் பாதையில் பாவம் செய்தார்கள். அவர்களுடைய கிருபையின் நாட்கள், தொலைவில் சென்று விட்டது அவர்கள் கிருபையைக் கடந்து சென்று விட்டார்கள். ஏனென்றால் அவர்கள் தேவனை மறந்து விட்டார்கள். அந்நாட்களில் கர்த்தருடைய தூதனுக்கு அவர்கள் என்ன செய்தார்களோ, அவர்கள் அதே காரியத்தை செய்து கொண்டிருக்கிறார்கள், பரிகசித்தும், அதைக் கேலியும் செய்கிறார்கள். ஆனால் இப்பொழுது அவர் இரக்கத்தில் இங்கு இருக்கிறார்.

77. அவர் இரக்கத்தினால் தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும்போதே தேசங்களின் மீது நியாயத்தீர்ப்பை ஊற்ற வருவார், ஆகவே, ஓ, துரிதமாய் இங்கே வந்துவிடுங்கள். பிள்ளைகளே, துரிதமாய் இங்கே ஓடி வாருங்கள், இந்த மனிதர்களால் உருவாக்கப்பட்ட கோட்பாடுகளில் இருந்தும், அவிசுவாசம் என்னும் பாபிலோனிய இறைக் கோட்பாட்டுச் சுவர்களை விட்டும், பாரம்பரியங்களை விட்டு வெளியே வாருங்கள். மனிதர்களால் உருவாக்கப்பட்ட கோட்பாடுகளில் இருந்து வெளியே ஓடுங்கள். தேவனுடைய கிருபையில் அவைகளில் இருந்து வெளியே வந்துவிடுங்கள், இரக்கம் பெறுவதற்காக கூக்குரல் இடுங்கள், ஏனென்றால் அவருடைய சொந்தக் குமாரனுடைய இரத்தம் நமக்கு இரக்கம் கொடுக்கிறது. இந்த சந்தேகங்கள் நிறைந்த பழைய உலகத்தை விட்டு வெளியே வாருங்கள். உங்களுடைய மூடநம்பிக்கையை வெளியேற்றுங்கள். தேவனுடைய இரக்கத்தின் செய்தியை ஏற்றுக் கொள்ளுங்கள், அவருடைய விடுதலையின் செய்தியை ஏற்றுக்கொள்ளுங்கள், அவருடைய கிருபையின் மையப் பகுதிக்கு ஓடுங்கள், அங்கே, "ஓ, இயேசுவே, நீர் தேவனுடைய குமாரனாய் இருக்கிறீர், என் மீது இரக்கமாயிரும்" என்று கூக்குரலிடுங்கள்.

78. ஏனென்றால் இந்த மனிதர்களால் - உருவாக்கப் பட்ட கோட்பாடுகளின் சுவர்கள் சுக்குநூறாக உடைந்து அவிசுவாசமுள்ள உலகத்தோடு அழியப்போகிறது. ஏனென்றால், விசுவாசிக்காதவர்கள், விசுவாசிக்காதவர் களுடன் சேர்ந்து மொத்தமாக அழிந்து போவார்கள். அவிசுவாசம் கொண்டுள்ள உலகத்தோடு விசுவாசிக்காத வர்களும் அழிந்து போனார்கள். ஆனால் நீதிமானாக லோத்து வெளியே வந்துவிட்டான், அதுபோலவே நோவாவும். சற்றுநேரம் நாம் ஜெபத்தில் இருக்கையில் அதை எண்ணிப்பாருங்கள்.

79. இப்பொழுது புருஷர்களே, ஸ்திரிகளே, உன்னத மான தேவனுடைய ஊழியக்காரன் என்ற நிலையில், இன்று இரவில் உங்களுடைய சகோதரனாகிய நான் நீங்கள் எந்த சுவரில் சாய்ந்து கொண்டு இருந்தாலும் சரி, ஒவ்வொரு சுவரை விட்டும், அவிசுவாசம் என்னும் சுவரை விட்டும் வெளியே வாருங்கள் என்று உங்களை மன்றாடிக் கேட்கிறேன், “நல்லது, ஒருவேளை இது மனோவசியமாய் இருக்கலாம்” என்று நாத்திகன் சொல்லக்கூடும். அவ்வாறு ஆபிரகாம் எண்ணியிருந்தால் என்ன நடந்திருக்கும்?

80. “நான் ஒரு மெத்தடிஸ்ட். நான் ஒரு கத்தோலிக்கன். நான் ஒரு பெந்தேகோஸ்தேயன்” என்று கூறிக்கொள்கிற அந்தப் பழைய மனிதர்களால் - உருவாக்கப்பட்ட கோட் பாடுகள் என்னும் சுவர்களை விட்டு தூரமாய் வெளியே வந்துவிடுங்கள். அவைகள் யாவும் மனிதர்களால் உருவாக்கப்பட்ட சுவர்களே. மிகப்பெரிய பூமி அதிர்ச்சி உண்டாவதற்குமுன், அவைகளில் இருந்து வெளியேறி தேவனுடைய கிருபையின் மத்திய பாகத்திற்கு வந்து விடுங்கள் என்று ஆவியானவர் வெளியே இழுப்பதை உங்களால் உணர முடியவில்லையா? அந்தச் சிறிய பறவைகள், அவைகள் ஏதோ ஒன்று வரப்போகும் ஆபத்தை உணர்கின்றன, அவைகள் அதன்படியே செய்து

தப்பித்துக்கொள்கின்றன. தேவனும் உங்களிடம் ஒன்றைக் காண்பிக்கிறார். கர்த்தராகிய இயேசு, அவரைப் பின் தொடருங்கள்.

81. உங்கள் தலைகள் தாழ்த்தப்படுவதாக. பாவியான நண்பனே, இன்றிரவில் கிறிஸ்துவினிடத்தில் உன் கரங்களை உயர்த்தி, “தேவனே, என் மீது இரக்கமாயிரும் என்று சொல்வாயா என்று நான் வியப்புறுகிறேன். கடைசிக் காலத்தில் இந்தவிதமான நிலையில் நான் இருக்க நான் விரும்பவில்லை” என்று கூறுவாயாக. உன்னுடைய கரங்களை உயர்த்தமாட்டாயா? “சகோதரன் பிரன்ஹாம் எனக்காக ஜெபியுங்கள், உண்மையாகவே, தேவனுடைய பார்வையில், இப்பொழுது ஜீவிக்கிற இந்த நிலையில் நான் மரிக்க விரும்பவில்லை” என்று கூறுவாயாக. நீ இங்கே இருக்கிறாயா? உன்னுடைய கரங்களை சற்றே உயர்த்துவாயாக.

82. சீமாட்டியே, தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக. அதற்கு தைரியம் வேண்டும் சீமாட்டியே, தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக. ஐயா, தேவன் உம்மை ஆசீர்வதிப் பாராக. ஐயா, இங்கே இந்தப் பக்கமாக இருக்கும் உம்மைத் தேவன் ஆசீர்வதிப்பாராக. இந்தப் பக்கம் இருக்கிற சீமாட்டியே, தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக.

“சகோதரன் பிரன்ஹாமே” என்று கூறுகிறீர்கள்... தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக. என்னுடைய சகோதரனே, தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக, பின்னால் இருக்கிற நீங்கள், ஐயா, தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக.

83. ஓ, கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. அவர் கண்களைத் திறக்கிறார். அவர் செய்வதில் உமக்கு சந்தோஷம் தானே? ஏனென்றால், “என் பிதா ஒருவனை அழைக்காவிட்டால் ஒருவனும் கரங்களை உயர்த்த முடியாது. அவர் யாரை முன்னறிந்தாரோ அவர்களை அழைக்கிறார். அவர் யாரை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியிருக்கிறார்.

அவர் யாரை நீதிமான்களாக ஆக்கினாரோ, அவர்களை மகிமைப்படுத்தியுள்ளார்.

84. பூமியின் புவியீர்ப்பு சக்தியைக் காட்டிலும் ஏதோ மிகவும் பலமான ஒன்று உங்களுக்குள் இல்லாவிட்டால் உங்கள் கரங்களை நீங்கள் உயர்த்த முடியாது. ஈர்ப்பு சக்தி உங்கள் கைகளை கீழே தொங்கும்படி செய்கிறது, அது இயற்கை, அது விஞ்ஞான பூர்வமானது. ஆனால் உனக்குள் ஒரு ஆவி இருந்து கொண்டு, நீ தவறாய் இருக்கிறாய் என்று கூறுகிறது, உனக்கு கிறிஸ்து தேவையாய் இருக்கிறார். நீ அந்தப் பிரமாணத்தை மீறி வானத்தையும் பூமியையும் படைத்த சிருஷ்டி கர்த்தரை நோக்கி உன் கைகளை உயர்த்துகிறாய்.

85. அவருடைய பிரசன்னம் அருகாமையில் இருக்கும் போதே, உன் கரத்தை உயர்த்தாமல் இருக்கும் பாவியான நண்பனே, 15 பேர் அல்லது 20 பேர் ஏற்கனவே தங்கள் கரங்களை உயர்த்தியுள்ளனர், உன்னுடைய கரங்களை உயர்த்துவாயா? சிறியராயிருக்கும் உம்மை தேவன் ஆசீர் வதிப்பாராக. மாடியின் முன்பக்கத்தில் இருக்கிறவர் களே உங்களைக்குறித்து என்ன?

86. “நல்லது, சகோதரன் பிரன்ஹாமே, என் பக்கத்தில் ஒருவர் உட்கார்ந்துகொண்டிருக்கிறார்” என்று நீங்கள் எண்ணுகிறீர்கள்.

87. ஆனால், ஓ, தேவனே, ஆம் யாரோ ஒருவர் உங்கள் அருகில் உட்கார்ந்துகொண்டிருக்கிறார். அது கர்த்தருடைய தூதனாகும். உன் பக்கத்தில் உட்கார்ந்து இருக்கிறவரைக் குறித்து நீ அதிகமாய் பயப்படுகிறாயா? அல்லது உன் சமூக அந்தஸ்தை பெரிதாக எண்ணி பிரசங்கிக்கப்பட்டு, நிரூபிக்கப்பட்ட சுவிசேஷத்தை மறுதலித்து வெளியே நடந்து செல்ல போகிறாயா? ஒரு சபையைச் சேர்ந்து கொள்ள வேண்டும் என்று உம்மைக் கேட்கவில்லை; இரக்கத்தைப் பெற்றுக்கொள்ள ஓடுங்கள்

என்று தான் நான் கேட்கிறேன், "இங்கே வந்துவிடு, ஏனென்றால் நீ இங்கே வருமட்டாய் நான் ஒன்றும் செய்யக்கூடாது."

88. நாம் ஜெபிப்பதற்கு முன்பதாக யாராவது அவர்களுடைய கரங்களை உயர்த்துவார்களா? இங்கே இருக்கிற சீமாட்டியே, தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக. பின்னால் இருக்கும் சீமாட்டியே, தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக. சீமாட்டியே, தேவன் ஆசீர்வதிப்பாராக. ஐயா, அங்கே இருக்கிற உங்களை தேவன் ஆசீர்வதிப்பாராக. இன்னும் சிறிதுநேரம் காத்திருக்கிறேன். இங்கே இருக்கும் சீமாட்டியே, தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக. ஐயா, தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக. அங்கு இருக்கிற வாலிபனே, தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக. இங்கே உட்கார்ந்திருக்கும் சீமாட்டியே, தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக. முன்வரிசையில் இருக்கும் இந்த வாலிபனே தேவன் உம்மை ஆசிர்வதிப்பாராக.

89. இப்பொழுது தங்கள் கரத்தை உயர்த்ாதவர் எவராவது இருப்பின் "ஓ தேவனே என் மேல் இரக்கமாயிரும்" என்று சொல்வீர்களாக. ஓ தேவனே சுவற்றில் எழுதப்பட்டுள்ள கையெழுத்துக்களை காண்கிறேன். என்னுடைய இருக்கையில் ஏதோ ஒன்று என்னை இழுக்கிறது. "இது உன்னுடைய வேளை. நீ ஒரு கிறிஸ்தவன் என்று அறிக்கை செய்கிறாய், ஆனால் நீ கிறிஸ்தவன் அல்ல" என்று கூறுகிறது.

90. "ஓ, நான் அறிக்கையை செய்வதற்கு வெட்கப்படுகிறேன்..." இப்பொழுது வெட்கப்படாமல் இருங்கள். அவர் வரும்போது நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? அப்பொழுது மிகவும் தாமதமாய் இருக்கும். இப்பொழுதே வாருங்கள்.

91. முடிப்பதற்கு முன்பாக வேறுயாராவது கரத்தை உயர்த்துவீர்களா? "ஓ, தேவனே, என்மேல் இரக்கமாயிரும்.

என் பிதாவே என்மேல் இரக்கமாயிரும்'' என்று கூறுங்கள். வாலிபனே தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக. "நான் இப்பொழுது உம்மை என் இரட்சகராக ஏற்றுக்கொள்கிறேன். எடுத்துக்கொள்ளப்படுதல் நடக்கும் அந்த நாளில் நீர் என்னை மகிமைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நான் விரும்புகிறேன். நான் போக விரும்புகிறேன். ஏனென் றால் இன்னும் நாட்கள் செல்லப்போவதில்லை என்பதை அறிந்திருக்கிறேன்; நாம் கடைசி நாட்களில் இருக்கிறோம்.''

92. பின்வாங்கிப்போனவர்கள் இருப்பின், அவர்களும் கூட உங்கள் கரங்களை உயர்த்துவீர்களா? "தேவனே, என் மேல் இரக்கமாயிரும். என்னால் எவ்வளவு துரிதமாய் மறுபடியும் இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க முடியுமோ அவ்வளவு துரிதமாக ஓடுவேனாக. இந்தப் பழைய சுவர் களையே நான் நீண்டகாலம் சுற்றி வந்துவிட்டேன், போதும் என்றாகிவிட்டது. கர்த்தாவே, நான் மீண்டும் வீட்டிற்குத் திரும்ப வாஞ்சிக்கிறேன். நான் இப்பொழுதே அதன் பாதையில் நான் இருக்கிறேன்.'' உங்கள் கரத்தை உயர்த்து வீர்களா? தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக. தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக. நல்லது, ஒவ்வொரு கரத்தையும் அவர் பார்க்கிறார்.

93. ஒருபோதும் மறுபிறப்படையாத, ஒருபோதும் பரிசுத்த ஆவியைப் பெறாத, இங்கு வந்த பிறகுதான், சற்றுமுன்பு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்கள் உங்களில் எத்தனைபேர் வந்திருக்கிறீர்கள்? "நீங்கள் என்னை உங்கள் இரட்சகர் என்று ஏற்றுக்கொண்டிருந் தாலும், பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படாமல், நீங்கள் ஒருபோதும் எடுத்துக் கொள்ளப்படுதலில் செல்லமுடியாது.'' அதுதான் வேத வாக்கியம். மறுபடியும் நீங்கள் பிறவா விட்டால் நீங்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தைப் பார்க்க முடியாது. புதிய பிறப்பினால் தேவன் உங்களை நிரப்ப வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், உங்கள் கரங்கள்

உயர்த்தப்பட்டிருப்பதைப் பார்க்கட்டும் மற்றும் “தேவனே என்மேல் இரக்கமாயிரும், உம்முடைய ஆவியை என்மேல் அனுப்பும்” என்று கூறுங்கள். அது முற்றிலும் சரி, பெருந் திரளான கரங்கள்.

94. அமைதியாகவும், பயபக்தியுடன்... இப்போது நாம் ஜெபிக்கப்போகிறோம்.

*தேவன், பழமை நாகரீக தேவ வார்த்தை*

*ஒருபோதும் அதன் வல்லமையை இழக்காது*

*மீட்கப்பட்ட தேவனுடைய சபை*

*இரட்சிக்கபட்டு, பாவத்தை விட்டு விடும் வரை.*

95. அந்தக் கவிஞன் அந்தப் பாடல் வரிகளை எழுதின போது, பிதாவே, அவர் என்ன எழுதுகிறார் என்பதை அறிந்திருப்பாரானால் வியந்துபோயிருப்பார் இல்லையா? அந்தக் கடைசி நபர் உள்ளே கொண்டு வரப்பட்ட பின், அதன்பின்னர் வார்த்தை இனியும் பயனுள்ளதாய் இருக்க போவதில்லை. அது பன்றிக்கு முன்னால் போடப்பட்ட முத்துக்களைப்போல முழு உலகத்திற்கும் இருக்கும். ஆனால் நம்முடைய தேசம் நியாயத்தீர்ப்பின் அலை களுக்குக் கீழே சவாரி செய்துகொண்டிருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம், நாம் கடல் கடந்து பார்க்கும்போது, தூரத்திலே, கருப்பு நிறக் கரங்களையும், மஞ்சள் மற்றும் பழுப்பு நிறக் கரங்களும் உயர்த்தப்பட்டு இரக்கத்திற்காக கதறி முறையிடுகிறதைப் பார்க்கிறோம், நம்முடைய இருதயம் நமக்குள்ளே கலங்குகிறது. வருகிற சனிக்கிழமை அன்று இப்படத்தை பார்க்கின்ற ஜனங்கள், நீங்கள் காத்திருப்பீர்களென்றால், அவர்கள் அந்த தரிசனத்தைக் பிடித்து கொள்ள முடியும்.

96. இன்றிரவில் தங்கள் கரங்களை உயர்த்தியுள்ள இவர்கள் மீது உம்முடைய இரக்கம் இருப்பதற்காக

மகாபரிசுத்தமுள்ள தேவனே, நாங்கள் உமக்கு நன்றி கூறுகிறோம். கர்த்தாவே, அவர்களின் அநேகர், தங்கள் கரங்களை உயர்த்தினவர்கள் எல்லாம் பாவிகளாய் இருக்கிறார்கள், "தேவனே, நான் ஒரு பாவி, என்மேல் இரக்கமாயிரும்" என்று சொன்னார்கள். "என் வசனத்தை கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு, நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட் படாமல், துன்மார்க்கரோடு அவன் நியாயந்தீர்க்கப் படுவதில்லை, நியாயத்தீர்ப்புக்கு வருவதில்லை, மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்கு உடையவனாய் இருக்கிறான்; ஆனால் மரணத்திலிருந்து நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக் கிறான்" அவர்களுக்காக உமக்கு நன்றி கூறுகிறேன் கர்த்தாவே, இப்பொழுது அவர்கள் எல்லாம் உம்முடையவர் களாக இருக்கிறார்கள்.

97. வலை வீசப்பட்டாயிற்று, சுவிசேஷ வலை. அது எதைப் பிடித்திருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. அது ஆமைகளைப் பிடித்திருக்கலாம், பாம்புகளைப் பிடித் திருக்கலாம், அது பல்லிகளைப் பிடித்திருக்கலாம், ஆனால் நிச்சயமாக ஒருசில மீன்களையும் பிடித்திருக்கும். ஜனங் களின் இருதயத்தை நீர் அறிவீர். அவைகள் ஒவ்வொன்றும் மீன்களே என்று நான் நம்ப வாஞ்சிக்கிறேன். அது எஜமானுடைய மேஜையில் பயனுள்ளதாக இருக்கட்டும். கர்த்தாவே, அருளிச்செய்யும்.

98. துரிதமாய், பரிசுத்த ஆவியினால் நிரப்பும், ஆகவே சபை அங்கே செல்வதற்கு ஆயத்தமாகும். எல்லா ஸ்தாபனங்களில் இருந்தும், எல்லா கோட்பாடுகளிலிருந்தும் இப்பொழுதே அவர்கள் தப்பி பாதுகாப்பான பேழையான கர்த்தராகிய இயேசுவின் மார்பை சென்றடைவார்களாக, ஆகவே பூமியில் இருப்பவர்களை, பரலோகத்திலிருந்து அக்கினி வெளிப்பட்டு அவர்களைச் சோதிக்கட்டும்... கர்த்தாவே அருளிச்செய்யும். எல்லாத் துதிகளும் உமக்கே

உரியது, ஆசீர்வதிக்கப்பட்ட இயேசுவின் நாமத்தில் அவர்களை நாங்கள் உம்மிடம் சமர்ப்பிக்கிறோம். ஆமென்.

99. அதே இசையைத் தொடர்ந்து வாசித்துக் கொண்டேயிருங்கள், ஓ, அதை எவ்வளவாய் நான் நேசிக்கிறேன். நான் ஒரு சிறு பையன் அல்ல, நீங்கள் அறிவீர்கள். இந்நாட்களில் ஒருநாள், இந்த வேதாகமத்தைக் கடைசி முறையாகத் திறக்கப்போகிறேன். அது நடக்கும்போது நான் பிரசங்கப்பீடத்தில் நின்றுகொண்டிருப்பேன் என்று விசுவாசிக்கிறேன். நான் அவரை நேசிக்கிறேன். அவர் நிஜமானவர் என்பதை நான் அறிவேன். வயதாகி, உடல்நலம் குன்றிய, என்னுடைய ஏழை சகோதரனையும், சகோதரியையும், நம்பிக்கை இழந்தவர்களை அவருடைய இரக்கத்திற்குள்ளும், கிருபைக்குள்ளும் அழைக்க நான் எவ்வளவாய் நேசிக்கிறேன்.

100. அந்தப் பழைய பாடல்கள் என் மனதை சிலிர்க்கச் செய்கின்றன. அவைகள் ஊக்குவிப்பட்டு எழுதப்பட்டவைகளாக இருக்கிறது. இயேசு பூமியில் இருந்தபோது அவைகளை குறிப்பிட்டு சொன்னார். “அது சங்கீதப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கவில்லையா?” அது அந்தப் பாடல்களே.

*ஓ, தேவ ஆட்டுக்குட்டியே,*

*நான் வருகிறேன்! நான் வருகிறேன்!*

சற்றே, நாம் அதை ஒருமுறை பாடுவோம்.

(அதை உண்மையாய் உணர்ந்தால், உங்கள் கரங்களை உயர்த்துவீர்களா?... )

*எந்த தகுதியுமின்றி, நிபந்தனையின்றி*

*எனக்காக உம்முடைய இரத்தம் சிந்தப்பட்டது,*

*வா என்று என்னை அழைத்தீர்*

*என் மீட்பரே ஓ, ஆட்டுக்குட்டியே வந்தேன்... வந்தேன்.*

101. இந்தப் பாடலை நாம் வாய்த்திறவாமல் இசையின் சத்தம் மட்டும் வெளியே வரும்படியாய் பாடும்போது, இப்பொழுது இதை உங்கள் மனதில்கொள்ளுங்கள். இந்த நாட்களில் ஒருநாள் நாம் நின்றுகொண்டிருப்போம், நீங்கள் மறுரூபம் அடைவீர்கள். இந்த அழிவுக்குரியது, இந்த இழிவான சரீரங்கள் முதுமையான ஒரு மனிதன் என்ற நிலையிலிருந்து வாலிபனாய் மாறிவிடும். அவரைச் சந்திப்பதற்கு நாம் ஆகாயத்தில் பறந்து செல்வோம், அவரோடுகூட இருப்போம், அவரோடு நித்திய நித்தியமாய் ஐக்கியம் உடையவர்களாக இருப்போம்.

ஏனென்றால், நான் வாக்கு கொடுக்கிறேன், நான் நம்புகிறேன்,

*ஓ, தேவனுடைய ஆட்டுக்குட்டியானவரே,*

*நான் வருகிறேன்! நான் வருகிறேன்!*

102. ஓ, அந்தநாள் அற்புதமாக இருக்காதா? மனுஷ குமாரன் தன்னை அவருடைய சபைக்கு வெளிப்படுத்திக் கொண்டிருப்பதைக் காண இன்று ஜீவித்துக் கொண்டிருப் பதைக் குறித்து நீங்கள் மகிழ்ச்சியாயில்லையா? “மனுஷ குமாரன் வெளிப்படும் நாளில்...” அவர் என்ன செய்கிறார்? முதலாவதாக இரக்கத்தில் தன்னை வெளிப்படுத்துகிறார். அதன்பின், அடுத்தமுறை, இரக்கத்தைப் புறக்கணித்தவர் களை கடிந்துகொள்ள நியாயத்தீர்ப்பில் அவர் தன்னை வெளிப்படுத்துகிறார். இப்பொழுது இரக்கத்தின் நேரம்.

103. அவர் தன்னை எதில் வெளிப்படுத்திக் கொண் டிருக்கிறார்? இரக்கத்தில், உன் ஆத்துமாவை இரட்சித்து, அவருடைய ஜீவனையே உனக்குக் கொடுத்து, துக்கத்துக்கு பதிலாக சந்தோஷத்தை, பயத்திற்குப் பதிலாக விசுவாசத்தை, வியாதிக்குப் பதிலாக சுகத்தைக் கொடுத்து

இரக்கத்தில் தன்னை உனக்கு வெளிப்படுத்துகிறார், அங்கே தொடக்க காலத்தில் என்ன செய்தாரோ, அதையே இப்பொழுதும் செய்கிறார். அதை அவர் இப்பொழுது செய்கிறார் என்றால், எடுத்துக்கொள்ளப்படுதலும், நியாயத் தீர்ப்பும் எவ்வளவு தூரத்தில் இருக்கப்போகிறது? நான் எதைக்குறித்து பேசுகிறேன் என்பதை எத்தனைபேர் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். கையெழுத்து, கர்த்தராகிய இயேசு தன்னை வெளிப்படுத்துவது.

104. சற்று நினைத்துப்பாருங்கள், அவர் பூமியில் இருந்த நாட்களுக்கு பிறகு இதுவே முதல்முறை செய்யப் படுகிறது. அவர் தம்மை பூமியில் யூதர்களுக்கு வெளிப்படுத்தும் போது, அதை அவர் எவ்வாறு செய்தார்? பிலிப்பு சென்று நாத்தான்வேலை ஒரு மரத்தடியில் கண்டான். அவன் இயேசுவினிடம் வந்தபோது, அவன் யார் என்றும், இங்கு வருவதற்கு முன் அவன் எங்கிருந்தான் என்றும், இயேசு அவனிடம் கூறினார். அது அவனை ஒரு விசுவாசியாக ஆக்கியது. அவர் தன்னை வெளிப்படுத்திக்கொண்டிருந்தார். அது சரியா? அதன்பின் கி.பி.96ல், டைட்டஸ் (Titus) என்பவரால் எருசலேம் முற்றிகை இடப்பட்டு அழிவு ஏற்பட்டது.

105.யூதர்கள் என்ன சொன்னார்கள்? “அவன் ஒரு அசுத்த ஆவி பிடித்தவன்”, என்றார்கள்.

அதற்கு அவர் “நான், இப்பொழுது என்னை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும்போது, என்னுடைய நாளில், உங்களை நான் மன்னிக்கிறேன். ஆனால் பரிசுத்த ஆவியானவர் இதுபோலவே தன்னை வெளிப்படுத்தும் போது, அவருக்கு விரோதமாக பேசப்படும் ஒருவார்த்தை, அது ஒருபோதும் இம்மையிலும், மறுமையிலும் மன்னிக்கப்படாது” என்றார்.

106. அவர் தம்மை சமாரியர்களுக்கு வெளிப்படுத்தின போது, அதை எவ்வாறு வெளிப்படுத்தினார்? கிணற்றண்

டையில் இருந்த அந்த ஸ்திரியிடம், அவளிடத்திலுள்ள தவறு என்ன என்பதை அவளிடம் கூறினார். "ஐயா, நீர் ஒரு தீர்க்கதரிசி என்று காண்கிறேன், மேசியா வரும்போது இப்படிப்பட்ட காரியங்களை அவர் செய்வார் என்று நாங்கள் அறிவோம்."

"உன்னோடு பேசுகிற நானே அவர்" என்று அவர் சொன்னார்.

அவள் வேகமாய் பட்டணத்திற்குள் ஓடி, "ஒரு மனிதன் நான் செய்த எல்லாவற்றையும் கூறினார், அவர் மேசியாவா என்று வந்து பாருங்கள்" என்று சொன்னாள்.

107. ஆபிரகாமிற்குத் தம்மை வெளிப்படுத்தினவர்க்குள் இருந்த அதே தேவன் அதே தூதன், அதே ஆவி, அதே வழியில், அதே வகையில், அதே செய்தியில் தன்னை வெளிப்படுத்தினார். மனுஷகுமாரன் வரும்பொழுதும் அவ்வாறே நடக்கும். அதே விதமாக வெளிப்படுத்தப்படும் என்று இயேசு கூறினார்.

108. நான் சொல்வதற்கு ஒன்றுமில்லை. கர்த்தர் தாமே தன்னை அவருடைய பிள்ளைகளுக்கு இரக்கத்தில் வெளிப் படுவாராக, அதுவே என்னுடைய ஜெபமாக இருக்கிறது.

109. கர்த்தராகிய யேகோவாவே, இப்பொழுது கர்த்தாவே, என் முழு இருதயத்தோடும் இந்த ஜனங் களோடு பேசினேன். ஏனென்றால், நான் பேசின என்னுடைய வார்த்தைகளுக்கு அந்த மணிநேரத்தில் நான் கணக்குக் கொடுக்க வேண்டும் என்பதை உணர்கிறேன். என்னுடைய வார்த்தைகளினாலே நான் எற்றுகொள்ளப் படலாம் அல்லது நான் குற்றவாளி என்று தீர்க்கப்படலாம். மேலும், நான் என்னுடைய வார்த்தைகளைப் பேசவில்லை, நான் உம்முடைய வார்த்தைகளையே பேசினேன். ஆகவே, கர்த்தாவே, ஒருநாளில் எனக்காக சமாதானத்தோடு வரப்

போகிற உம்மை நோக்கி விசுவாசத்தோடே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

110.இந்த மனித இனத்தில் உள்ள, ஆதாமின் அனைத்து வம்சவழியினரே, என்னுடைய சகோதரர்களே, என்னுடைய சகோதரிகளே நான் உங்களை நேசிக்கிறேன். நீர் சொன்னபடியே சுவிசேஷம் பிரசிங்கிக்கபட்டு, அது புறக்கணிக்கப்படுகிறது, ஆகவே இது கடைசிக்காலம் என்று காண்கிறேன், மேலும் இப்பொழுது, இந்தக் கடைசி மணிநேரத்தில், அதே கிரியைகளை நடப்பிக்க அதே தூதனை கீழே அனுப்பியுள்ளீர். அவர்கள் மனிதர்களால் ஏற்படுத்தபட்ட தங்கள் சொந்த இறையியல் கோட்பாடு களையே கற்றுக்கொண்டு, அவர்கள் இதைக் கேலி செய்கிறார்கள், இதைப் பரிகாசம் செய்கிறார்கள். கர்த்தாவே, அவர்கள் அந்த நாட்களிலும் அதையே செய்தார்கள். இந்தச் சிறிய கூட்டத்தார், இன்றிரவில் அதைக்காண தவறாதிருப்பார்களாக. விஞ்ஞான நிருபணமாக, அவரு டைய படம்கூட எடுக்கப்பட்டு விட்டது. அந்நாளில் காயீனின் சந்ததியர் போக்கு சொல்ல இடம் இல்லை.

111. புறஜாதிகளின் யுகம் முடிவடையும் இந்த நேரத்தில், அவர் வந்து, ஆறுதல்படுத்தி, அவர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிற பரலோகத்தின் தேவனுடைய குமாரனாக தம்மை வெளிப்படுத்துவாராக. கடந்த சில வருடங்களாக நீர் எங்களுக்கு அவ்வாறு இருந்து வந்திருக் கிறீர், உம்முடைய மகிமைக்கென்று இந்தக் கிரியைகளை செய்யும்படி அனுமதித்துள்ளீர், சுவிசேஷத்தின் நிமித்தம், இந்த இரவிலும் அது செய்யப்படுவதாக, அது, “நான் செய்கிற கிரிகைகளை, நீங்களும் செய்வீர்கள், நான் என் பிதாவினிடத்திற்கு போகிறபடியால், அதினும் பெரிய கிரியைகளையும் செய்வீர்கள். கொஞ்சக் காலம் உலகம் என்னை காணாது; ஆனால் நீங்கள் என்னைக் காண்பீர்கள், நான் உங்களோடுகூட இருப்பேன், உலகத்தின் முடிவுப்

பரியந்தம் உங்களோடு கூடவே இருப்பேன்" என்ற நம்முடைய கர்த்தருடைய வார்த்தைகள் ரூபகாரபடுத்த படுவதாக. கர்த்தாவே, உமக்கு நன்றி. உம்முடைய நேச குமாரனாகிய கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் உமக்கு நன்றி கூறுகிறோம். ஆமென்.

112. ஜெபத்திற்காக நாம் ஒரு சிலரை அழைக்கப் போகிறோம்; அது என்னவென்றால், பில்லி ஏதாவது கொடுத்திருந்தால், இன்றிரவு அவன் ஜெப அட்டைகளைக் கொடுத்தானா? அது நல்லது. அது என்னவாக இருக்கிறது? "பி" (B) குறியீடு கொண்டவர்கள். நல்லது, கடந்த இரவு எதிலிருந்து அழைத்தோம்? அது அவ்வாறு இல்லையா...? ஓ, அது நல்லது, கடந்த மாலையில் நாம் ஜெப அட்டைகள் எதுவும் கொண்டிருக்கவில்லை. கூட்டத்திலிருந்து நேரடி யாக அழைத்தோம். இன்றிரவிலும் பரிசுத்த ஆவியானவர் அனுமதித்தால் அதை நாம் செய்யக்கூடும், அல்லது நான் ஒரு ஜெப வரிசையை அழைக்கக்கூடும்.

113. அநேக ஜெப அட்டைகளைக் கொடுக்கவேண்டும் என்று நான் விரும்பவில்லை, ஏனென்றால் சகோதரன் ஆஸ்பர்ன் (Osborn) மற்றும் நானும் எப்படியும் ஒவ்வொரு வரையும் நான் வரிசையில் கொண்டுவர வாய்ப்பு இருக்கிறது.

114. ஆகவே, இன்றிரவில், "B" அடையாளம் இட்ட ஜெப அட்டையில் எங்கோ ஓரிடத்திலிருந்து நாம் அழைப்போம். 50-ல் இருந்து நாம் அழைத்தோம் என்று நான் நம்புகிறேன். மற்றும் 1-ல், அடுத்து 85-ல் இருந்து அழைத்தோம். அது ஏறக்குறைய சரியாயிருக்கிறது என்று நான் எண்ணுகிறேன், என்னுடைய சிறந்த நினைவின்படி அது சரியே. இன்று இரவு 25-ல் இருந்து அழைப்போம். அது மற்றும் ஒரு புதிய எண்ணாக இருக்கிறது. எப்படி...?

115. நாம் ஏன் ஜெப அட்டைகளை கொடுக்கிறோம் என்று நீங்கள் வியப்படைந்தால், நீங்கள் அந்நியராய்

இருந்தால் நான் உங்களுக்கு அதைக் காண்பிக்கிறேன். உங்களில் எத்தனைபேர் வியாதியுள்ளவர்களாக இருந்து கர்த்தர் உங்களைச் சுகப்படுத்த வேண்டும் என்று விரும்பு கிறீர்கள் ,உங்கள் கரங்களை உயர்த்துங்கள், கட்டிடத்திற்குள் யாராவது இருக்கிறீர்களா? இப்பொழுது யார் முதலாவது வரவேண்டும். பாருங்கள், பரிசுத்த ஆவியானவர் நம் மத்தியில் அசைவாடுவதற்காக நாம் ஜெப அட்டைகளை கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதன்பிறகு அவர் கூட்டத்தினுடாக சென்று வியாதியஸ்தரை சுகமாக்கு கிறார்.

116. இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர் என்று எத்தனைபேர் உறுதியாய், முற்றிலுமாய் நம்புகிறீர்கள், அதேவகையில் அவர் தம்மை வெளிப் படுத்தப்போவதாக வாக்குரைத்துள்ளார் என்பதில் எத்தனை பேர் உறுதியாக இருக்கிறீர்கள்? மூல கோட்பாடுகளில் அவர் மாறாதவராய் இருக்கிறார், வல்லமையிலும் மாறா தவர், ஆவியிலும் மாறாதவர், செயலாற்றுவதிலும் அதே தன்மையுடையவராய் இருக்கிறார். ஆனால் அவருக்கு மாம்ச சரீரம் மட்டுமே இல்லை. ஆகவே அவர் என்ன சொன்னார்? "நானே திராட்சை செடி; நீங்கள் கொடிகள்" என்றார். திராட்சைச் செடி கனி கொடுப்பதில்லை. அது கொடியைப் பரிசுத்தப்படுத்தி கனிகளைக் கொடுக்க செய்கிறது. அது சரி.

117. ஒரு வார்த்தை என்னிடம் வந்துகொண்டே இருக்கிறது; நான் அதை விவரித்துக் கூறவேண்டும். இங்குயிருக்கும் யாரோ ஒருவர் அந்தத் தூதனைக் குறித்து அது யாராக இருக்கும் என்றும், இந்தத் தூதனை நான், "கர்த்தர்" என்று அழைத்ததை குறித்தும் வியப்படைந்து கொண்டிருக்கிறார். ஆபிரகாம்... அதை சந்தேகிக்கிற நபர் யாராக இருந்தாலும் அல்லது அதைக்குறித்து சிந்தித்துக்

கொண்டிருப்பவர் ஒரு சிறந்த அறிவாளியாக இருக்க வேண்டும்.

118. ஆபிரகாம், அவருடன் பேசிய தூதனுடைய நாமத்தை "கர்த்தர்" என்று அழைத்தான். அவர் ஏலோகீம் என்று எண்ணப்பட்டார், அவர் ஒரு மானிட சரீரத்தில் வெளிப்பட்ட சர்வ வல்லமையுள்ள, மகத்தான யேகோவா - ஆக இருந்தார். அவர் தன் சொந்தக் குமாரனாகிய இயேசுவின் சரீரத்தில் வெளிப்பட்டார். அவர் இன்றிரவில், தன்னை அவருக்கென்று ஒப்புக்கொடுத்த ஒவ்வொரு விசுவாசிகளின் சரீரத்திலும் வெளிப்படுகிறார். "நான் உங்களோடும், உங்களுக்குள்ளும் உலகத்தின் முடிவுப்பரியந்தம் இருக்கிறேன்." அது சரி.

நான் எங்கே விட்டேன்...? இருபத்தைந்து, என்ன...? ஜெப அட்டை எண் இருபத்தைந்து யாரிடம் உள்ளது? உங்கள் கரங்களை உயர்த்துங்கள். (ஒலிநாடாவில் காலியிடம்-ஆசி.)

119. தேவனுடைய வார்த்தை இங்கிருந்துதான் சத்தியத்தில் வெளிப்படவேண்டும் அல்லது அது தவறாகக் கொள்ளப்படும், ஏனென்றால் இயேசு கிறிஸ்து வாக்குக் கொடுத்துள்ளார். அதைக்குறித்து நீங்கள் நன்றாக அறிவீர்கள். நாம் கடைசிக்காலத்தில் இருப்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மையாக கிறிஸ்து இங்கே தன்னை வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறார், "கல்விமான்களுக்கும், ஞானிகளுக்கும், புத்திக் கூர்மையுள்ளவர்களுக்கும், மறைத்து கற்றுக்கொள்ளக்கூடிய பாலகர்களுக்குத் தம்மை வெளிப்படுத்துகிறார்." (மத்தேயு 11:25) அவருடையச் சபைக்கு தன்னை வெளிப்படுத்திக்கொண்டு, நியாயத்தீர்ப்பு வெளிப்படுவதற்குமுன் தன்னை வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறார், ஏனென்றால் அழிவுக்குரிய ஒரு தூதனை அவர் அனுப்புவதற்குமுன், ஒரு இரக்கத்தின் தூதனை அனுப்புகிறார். பரிசுத்த வேதாகமத்தை வாசித்துப்பாருங்கள்,

சரித்திரத்தைப் படித்துப்பாருங்கள், அது சத்தியமா இல்லையா என்பதைக் கண்டுகொள்ளுங்கள்.

120. எப்படி இருக்கிறீர்கள்? நீங்கள் தான் ஜெபிக்க வேண்டும் என்றிருக்கிற அந்த நபரா? இங்கே ஒரு ஸ்திரி நிற்கிறாள், ஒரு கருப்பான ஸ்திரி. நான் அறிந்தமட்டில், அந்த ஸ்திரியை என்னுடைய ஜீவியத்தில் ஒருபோதும் பார்த்தது கிடையாது, அவளை எனக்குத் தெரியாது என்பதில் நிச்சயமுடையவனாக இருக்கிறேன். நாம் ஒருவருக்கொருவர் அந்நியர்களாய் இருக்கிறோம், அப்படித் தானே அம்மணி? நாம் அந்நியர்கள் தானே? அது உண்மை என்றால் உங்கள் கரத்தை சற்றே உயர்த்துங்கள், நாம் அந்நியர்கள் என்பதை ஜனங்கள் பார்க்கட்டும்.

121. இப்பொழுது, இது ஒரு அழகான காட்சியாக இருக்கிறது, புனித யோவான் 4-வது அதிகாரத்தில் என்ன நடந்தது என்பதின் ஒரு சித்திரம்: ஒரு ஸ்திரி, ஒரு மனிதன், வெவ்வேறு இனத்தைச் சார்ந்த இருவர். ஒரு சமாரியர் மற்றும் ஒரு யூதன் இப்படியாக, இங்கே ஒரு வெள்ளை மனிதன், ஒரு கருப்பின ஸ்திரி: ஒரு சமாரிய ஸ்திரி மற்றும் ஒரு யூதன், பரிசுத்த வேதாகமத்தில் வருகிற ஒரு காட்சி. ஆனால், அந்த ஸ்திரியின் இருதயத்தில் என்ன இருந்தது என்று சொன்னதின் மூலம் இயேசு சமாரியர்களுக்குத் தன்னை அன்று அவ்வாறு வெளிப்படுத்துவார் என்றால், அதற்கு அவள் பிரதியுத்தரமாக, “நீர் ஒரு தீர்க்கதரிசியாய் இருக்க வேண்டும், ஆனால் அது மேசியாவுக்குரிய அடையாளம் என்று நாங்கள் அறிந்துள்ளோம்” என்று சொன்னாள்.

122. அதற்கு அவர், “நான் தான் அவர்” என்றார். நேற்று அவர் சமாரியர்களுக்கு தன்னை அவ்வாறு வெளிப் படுத்தினால் இன்று அவர் கருப்பினத்தாருக்கும் அதே

வகையில் தன்னை வெளிப்படுத்த வேண்டும். அவர் அவ்வாறே தன்னை வெளிப்படுத்துகிறார்.

123. அவர் அவ்வாறு செய்வாரானால்... இங்கு என்னுடைய கரங்களை உயர்த்துகிறேன், என்னுடைய ஜீவியத்தில் அவளை நான் ஒருபோதும் கண்டது இல்லை. அவள் தன் கரங்களை உயர்த்தினவளாக இருக்கிறாள், அதாவது அவள்... நான் அவளை அறிந்திருக்கவில்லை, அவளைப்பற்றி ஒன்றும் தெரியாது, ஒருபோதும் அவளைப் பார்த்ததும் கிடையாது, ஒன்றும் தெரியாது. அப்படியானால், பரிசுத்த ஆவியானவர் இயேசு கிறிஸ்துவை அதே வல்லமையோடு வெளிப்படுத்துவார் என்றால், எத்தனை பேர் அவரை மேசியா என்று ஏற்றுக்கொண்டு, அவரை விசுவாசிப்பீர்கள்? நீங்கள் அனைவரும் அதைச் செய்ய வேண்டும். ஜனங்கள் என்ற முறையில், நித்தியத்திற்கென்று குறிக்கப்பட்ட ஜனங்கள், நமக்கு மத்தியில் பரிசுத்த வேதாகமம் இருக்கிறது, என்னுடைய ஜீவியத்தில் அந்த ஸ்திரி அறிந்தமட்டில், சரியாக இப்பொழுது வரைக்கும் அவளைத் தெரியாது.

124. அது அங்கு இருக்கிறது. இப்பொழுது அது என்ன? அதுவா...? நீங்கள் கூறலாம்... அது நடந்தால் அது இயற்கைக்கு மேம்பட்டவையாக இருக்க வேண்டும்; நாம் அனைவரும் அதை அறிவோம். கடைசிக்காலத்திற்கு முன்பு எப்பொழுதும் தேவன் இயற்கைக்கு மேம்பட்ட விதத்தில் தன்னை வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறார். பாபிலோன் இராஜ்ஜியம் அழிக்கப்படுவதற்குமுன், நோவா பேழைக்குள் செல்வதற்குமுன், மோசே இஸ்ரேல் ஜனங் களை எகிப்தைவிட்டு அழைத்துச்செல்வதற்கு முன்பு, சோதோம் மற்றும் கொமோரா அழிவிற்கு முன்பு, எருசலேம் அழிக்கப்படுவதற்கு முன்பு, எப்பொழுதும், அது இயற்கைக்கு மேம்பட்டவையாகவே இருந்து வந்துள்ளது, இந்நாட்களிலும் அதைச் செய்வதாக வாக்குபண்ணியுள்ளார்.

125. இப்பொழுது, அவர்கள் அந்த நாட்களில் சொன்னது போல் நீங்கள் கூறலாம், "ஓ, அது பெயல் செபூல், ஒரு குறிசொல்லுபவன் என்றும், அது ஒரு…" ஆனால் குறிசொல்லுதல் என்ன என்பதை யாராவது அறிந் திருந்தால், குறிசொல்லுதல் என்பது பிசாசு பொய் உரைப் பதாகும், அதில் பாதி அளவுகூட உண்மை இருக்காது. இன்னொன்று குறிசொல்பவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களை இரட்சிப்படையச் செய்ய மாட்டார்கள். அவ்வாறு ஒருவர் இரட்சிக்கப்பட்டதாக எப்போதாவது நீங்கள் கேள்விப்பட்டது உண்டா? இல்லை. ஒருபோதும் நீங்கள் கேள்விப்படப் போவதுமில்லை. அவர்கள் பிசாசின் ஆவினால் பீடிக்கப்பட்டு, ஒரு தாறு மாறான ஆவியைக் கொண்டவர்கள். அது முற்றிலும் உண்மை.

126. கர்த்தருடைய தூதன் நீதியைப் பிரசங்கிக்கிறவர், மனந்திரும்புதல், கர்த்தருடைய வருகை மற்றும் அடை யாளங்களையும் காட்டுகிறார். உண்மையாகவே, பிசாசு குறிசொல்கிறவனை எடுத்துக்கொண்டு அல்லது ஒரு மந்திரவாதியை எடுத்துக்கொண்டு ஆள்மாறாட்டம் செய்கிறான், ஆனால் அந்த ஆள்மாறாட்டம் என்பது உண்மையான ஒன்று இருக்கிறது என்பதையே பிரகடனப் படுத்துகிறது. ஒரு கள்ள டாலர் என்பது ஒரு உண்மையான டாலர் இருக்கிறது என்பதையே பிரகடனப்படுத்துகிறது.

127. ஆகவே, சீமாட்டியே, நான் என்ன சொல்லப் போகிறேன் என்பது காரியம் அல்ல, நான் கூறுவதைக் காட்டிலும், நான் ஐம்பதுமுறை திரும்பத்திரும்பச் சொல்லக் கூடும், அதைவிட தேவனிடத்திலிருந்து வரும் ஒரு வார்த்தை எவ்வளவோ அர்த்தங்களைக் கொண்டதாக இருக்கும். ஆனால் நீங்களே நியாயாதிபதியாக இருக் கிறீர்கள். ஏதோ ஒன்றிற்காக நீங்கள் இங்கிருந்தால், நீங்கள் எதற்காக இங்கு இருக்கிறீர்கள் என்பதை நான் அறியேன்.

நீங்கள் எதற்காக இங்கு இருக்கிறீர்கள் என்பதை நான் அறிந்துகொள்ள எனக்கு ஒரு வழியும் இல்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் அவர் எனக்கு அதை வெளிப்படுத்துவார் என்றால், அவர் அங்கு செய்ததுபோல, அவருடைய குமாரன் கர்த்தராகிய இயேசு மூலமாக கிணற்றண்டையில் அந்த ஸ்திரிக்கு செய்ததுபோல செய்வா ரானால், அதன்பிறகு அது தேவனிடத்திலிருந்து வருகிறது என்று நீங்கள் நம்புவீர்களா?

128. இப்பொழுது, "நீ வியாதியாய் இருக்கிறாயா?" என்று நான் கேட்டால்,

"ஆம், ஐயா நான் வியாதியஸ்தள்" என்று கூறுவீர்கள்.

"நல்லது, கர்த்தர் உங்களை சுகமாக்கப்போகிறார்" என்று நான் கூறுவேன். அதைச் சந்தேகிப்பதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. அவர்...

129. கிணற்றண்டையில் இருந்த அந்த ஸ்திரிக்கு, அதை சந்தேகிப்பதற்கு எல்லா உரிமையும் இருந்தது, "நல்லது, ஸ்திரீயே, நீ — நீ ஒரு புறஜாதியாள், நீ ஒரு சமாரியா ஸ்திரியாக இருக்கிறாய் - நீ இரட்சிக்கப்பட முடியாது" என்று அவர் அவளிடம் கூறியிருக்கலாம், ஆனால் அவளுடைய இருதயத்தில் உள்ள இரகசியம் என்ன என்று அவர் கூறினார். ஆகவே, அது ஒரு ஆவிக்குரிய வல்லமையிலிருந்து வந்தது என்று அவள் அறிந்து கொண்டாள். ஆபிரகாம் மற்றும் முற்பிதாக்களின் காலத்தில் நடந்தது போல, மேசியா வரும்போதும் அதே காரியங்கள் நடக்கும் என்று அவள் போதிக்கப்பட்டிருந்தாள். அவள் ஒரு வேசியாய் இருந்தும்கூட, அதைப் பிடித்துக்கொள்ளும் அளவுக்கு போதுமான ஆவிக்குரியவளாக இருந்தாள். நிச்சயமாக.

130. நீ யாரென்று நான் அறியேன் அல்லது உன்னை குறித்து எதுவுமே தெரியாது, ஆனால் அவருக்குத்

தெரியும். ஆனால், அவர் அதை எனக்கு வெளிப்படுத்து வார் என்றால், சபையார் அதை நம்புவதாக வாக்குக் கொடுத்துள்ளனர், ஆகவே, நீயும் அதை நம்ப வேண்டிய வளாய் இருக்கிறாய்.

131. இப்பொழுது அதை விவரித்து சொல்வதற்கு நான் விரும்பியபடியே நான் சில வார்த்தைகளைக் கொண்டுள் ளேன். அதைச் செய்வதற்கு ஒன்றுமே கிடையாது. அது எதை உணர்த்துகிறது என்பதை நீங்கள் அறிவீர்களா? இங்கு இருக்கிற ஒவ்வொரு நபரும் என்னுடைய கட்டுப் பாட்டில் இருக்கிறார்கள். அது சரி. பரிசுத்த ஆவியானவர் இங்கு இருக்கிறார், அந்த அபிஷேகம் இங்கு இருக்கிறது. அது என்னை மேலும் கீழும் குதித்து கதறச் செய்ய வில்லை; அது கர்த்தருடைய ஆசீர்வாதங்களாக இருக் கிறது. அநேக நேரங்களில் பெந்தேகோஸ்தே ஜனங் களாகிய நீங்கள் அதனால் முட்டாளாக்கப்பட்டுள்ளீர்கள்.

132. எந்த மனிதனும் பெற்றிராத மகத்தான அபிஷேகத்தை இயேசு பெற்றிருந்தார். அவர் ஒரு வேதாகமப் பகுதியை வாசித்தார், இப்பொழுது நான் வாசித்தது போலவே. "இந்த வேதவாக்கியம் உங்கள் கண்கள் காண இந்த நாளில் நிறைவேறிற்று" என்று கூறினார். அவர் என்ன செய்தார்? ஒரு வேதாகம வாக்கி யத்தை வாசித்தார், அவர் மேலும் கீழும் ஓடவில்லை. அவர் வாசித்து முடித்து உட்கார்ந்தார், அவருடைய வாயிலிருந்து விலையேறப்பட்ட வார்த்தைகள் வந்தது, இதுவரை அபிஷேகம் பண்ணப்பட்டவைகளில் மகத்தான அபிஷேகம்; ஏனென்றால், "நியாயத்தீர்ப்பைக் கூறவும், வியாதியஸ்தரை சுகப்படுத்தவும், இப்படி இன்னும் பல... என் ஆவியை அவர்மேல் அமரப்பண்ணினேன்" என்று வேதவாக்கியம் கூறுகிறது. அதை அவர் சொன்னார்.

133. அது உங்களுடைய இரட்சிப்பின் ஆசிர்வாதங் களாக இருக்கிறது, அதை நீங்கள் அங்கே அனுபவித்து

களிகூறுகிறீர்கள், ஆசீர்வாதங்கள், வல்லமை அல்ல, ஆவியினால் உண்டாகிறது.

134. ஆனால் இப்பொழுது அவர் இங்கு இருக்கிறார், அந்த ஸ்திரி, இப்பொழுது இங்குகிருப்பாளானால், அவளுடைய ஜீவியத்தை மறைக்க முடியாது.

135. அந்த ஸ்திரி மார்பின், பக்கவிலாவில் பிரச்சனை உடையவளாய் இருக்கிறாள், அதற்காக அவள் ஜெபிக்கப் பட வேண்டும் என்று விரும்புகிறாள். அது **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதாக இருக்கிறது. நீ தோல் வியாதியையும்கூட கொண்டுள்ளாய், ஒரு வியாதி, அதற்காகவும் நான் ஜெபிக்க வேண்டும் என்று விரும்புகிறாய். அது கர்த்தர் உரைக்கிறதாவது என்பதாக இருக்கிறது. அது உண்மை.

136. அவளே நியாயாதிபதியாய் இருக்கட்டும். என்னுடைய சத்தத்தை கேட்கிறாயா? ஆனால் அது என்னுடைய சத்தம் அல்ல. அந்த ஸ்திரியை நான் அறியேன். அவர் என்ன பேசினாலும், அது ஏதோ ஒன்றாக இருக்கிறது, வேறு ஒரு மனிதன் என்னுடைய குரலை பயன்படுத்துகிறார். அது பரிசுத்த ஆவியானவராய் இருக்கிறார், அதை நீ நம்புகிறாயா?

137. இப்பொழுது, வெளியே இருக்கிற நீ, விசுவாசிக்க போகிறாய், இன்று இரவில் நீ மேலே அழைக்கப்படப் போவதில்லை. நீ விசுவாசிக்க தொடங்கு, “கர்த்தாவே, எனக்கு வெளிப்படுத்தும். உம்முடைய வஸ்திரத்தை நான் தொடட்டும், கர்த்தாவே” என்று கூறுவாயாக. பயப்படவும், நடுங்கவும் வேண்டாம். “உம்முடைய வஸ்திரத்தை நான் தொடட்டும், கர்த்தாவே, அவர் தாமே சுற்றிலும் திரும்பிப் பார்த்து, என்னுடன் பேசுவாராக” என்று கூறுவாயாக. என்ன நடக்கிறது என்று பாருங்கள்.

138. இன்னும் சற்றுநேரம் அந்த ஸ்திரியுடன் நான் பேசுவேனேயாகில், இன்னும் அதிகமாகச் சொல்லப்படும், கருப்பின ஜனங்களே நான் அந்த ஸ்திரியுடம் இன்னும் கொஞ்சநேரம் பேசுவதை நீங்கள் விரும்புகிறீர்களா? அப்படியானால், உங்கள் கரங்களை உயர்த்துங்கள். அவர் அவ்வாறு செய்வார் என்று எனக்குத் தெரியாது, ஆனால் ஒருவேளை அவர் அவ்வாறு செய்யக்கூடும். இன்னும் சற்றுநேரம் நான் உன்னுடன் பேசுவதை விரும்புகிறாயா? பரிசுத்த ஆவியானவர் என்ன கூறுகிறார் என்பதைப் பார்ப்போம்.

139. இப்பொழுது, அவர் என்னவெல்லாம் கூறினாரோ அது தவறு என்றால், இப்பொழுது எனக்குத் தெரியாது, நான் அறிந்த ஒரேவழி, இவைகள் ஒலிநாடாவில் பதிவு செய்யப்படுகின்றன. பதிவு செய்யப்பட்டவைகள் எப்பொழுதும் அலுவலகத்தில் இருக்கும் அல்லது பின்னால் இருக்கும். அவைகளை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

140. இப்பொழுது, கூட்டத்தில் உள்ளோர் இப்பொழுதும் என்னுடைய சத்தத்தைக் கேட்டுக் கொண்டிருப்பார்களேயானால், அந்த ஸ்திரி, தன் சரீரத்தில் பக்கவாட்டில் ஏதோ செய்துகொண்டிருக்கிறாள். பக்கவாட்டில் அவளுக்கு இருக்கும் பிரச்சனை, அது அவளை தொந்தரவு செய்கிறது, அது உண்மை. அதன்பிறகு, சரியாக இந்த நேரத்தில், அவள் வேறு ஒருவருக்காகவும் ஜெபித்துக் கொண்டிருக்கிறாள், அது அவளுடைய சகோதரியாகும். அவளுக்காகவே நீ ஜெபித்துக்கொண்டிருக்கிறாய், இப்பொழுது சரியாக உன் இருதயத்தில் ஜெபித்துக்கொண்டிருக்கிறாய். உன்னுடைய சகோதரி மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறாள், வியாதியாய் இருக்கிறாள். அவளுக்குக் கீழ்வாத நோய் இருக்கிறது (Arthritis), அவளுக்கு இருதய நோயும் இருக்கிறது, அதிகமாக இருமிகொண்டே இருக்கிறாள். அது ஆஸ்துமா நோயாகும்.

141.அதன்பிறகு ஒரு மனிதன் காட்சியில் தோன்றினான், அது உன்னுடைய சகோ... இல்லை, உன்னுடைய மைத்துனன். அவருக்கும் மூட்டுவலி மற்றும் இருதயநோய் இவைகள் உண்டு. அது கர்த்தர் உரைக்கிறதாவது என்ப தாகும். இப்பொழுது நீ நம்புகிறாயா? நீ விசுவாசிக்கிறாயா? அது நீ நம்புகிற நம்பிக்கையைப் பொறுத்திருக்கிறது. கர்த்தர் உன்னோடு இருப்பாராக, என் சகோதரியே, தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக.

142. நீ விசுவாசித்தாயா? இப்பொழுது, உண்மையான பயபக்தியுடன் இருங்கள்.

143. நீங்கள் எவ்வாறு இருக்கிறீர்கள்? எனக்குத் தெரிந்த மட்டில், வாலிப ஸ்திரியே, இதுதான் முதல்முறை, இதற்கு முன்பு நான் உனக்குமுன் ஒருபோதும் நின்றது கிடையாது அல்லது நீயும்கூட எனக்குமுன் நின்றது கிடையாது. நான் அவ்விதமாக யூகிக்கிறேன். அது அவ்வாறுதானே? அது அப்படியானால், உன்னுடைய கரங்களை சற்றே உயர்த்து வாயா?

144. இப்பொழுது, இங்கே ஒரு வெள்ளைக்கார ஸ்திரி இருக்கிறாள், ஒரு வெள்ளை மனிதனும் இருக்கிறார். இப்பொழுது, இதை வெள்ளைக்காரர்களுக்காகக் கூறு கிறேன், இங்கு நின்று கொண்டிருக்கிற இந்தப் பெண்ணுக்கு கர்த்தராகிய இயேசு தன்னை இவளுக்கு அறியப் பண்ணுவாரானால், என்னுடைய ஜீவியத்தில் அவளை ஒருபோதும் பார்த்ததில்லை, அவளுக்கும் என்னைத் தெரியாது, இல்லாவிட்டால் எங்காவது ஒரு கூட்டத்தில் என்னை பார்த்திருப்பாள். (அந்த சகோதரி சகோ. பிரன்ஹாமுடன் உரையாடுகிறார்) ஒருமுறை நீ எங்கோ ஒரு கூட்டத்தில் கலந்துகொண்டிருக்கிறாய், ஆனால் நீ மேடைக்கு வரவில்லை இல்லையா? இங்கே இப்பொழுது தான் வந்திருக்கிறாய், அதுதான் உண்மை. அப்படி என்றால் நாம் ஒருவருக்கொருவர் முற்றிலும் அந்நியர்கள்.

145. இப்பொழுது, நீ எதற்காக இங்கு இருக்கிறாய் என்று தெரியப்படுத்துவாரானால், அதற்கு நீதான் நியாயாதிபதியாய் இருக்கிறாய், அது அவ்வாறுதான் அல்லது அவ்வாறு இல்லை நீதான் கூறவேண்டும். நீ அதை அறிவாய். ஏதோ போய்க்கொண்டிருக்கிறது என்பதைக் குறித்து தெளிவாய் அறிந்துள்ளாய், ஒருவகையான உணர்ச்சி, இதற்குமுன் ஒருபோதும் அப்படிப்பட்ட உணர்ச்சியை பெற்றதில்லை, ஒரு நிஜமான இனிமையான உணர்வு, தாழ்மையான உணர்வு. கர்த்தருடைய தூதனே உனக்கும் எனக்கும் மத்தியில் ஒளியாய் நின்றுகொண்டிருக்கிறார். மேலும் ஒரு வாலிப ஸ்திரியைப் பார்க்கிறேன், அவள் தன் இருதயத்தைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறாள். அவளுக்கு இதயத்தில் ஒரு பிரச்சனை. அவளுடைய இருதயம் விட்டுவிட்டுத் துடிக்கிறது, அதனால் அவளுக்கு மூச்சுத்திணறல் உண்டாகிறது. அவளுக்கு மூச்சுவிட முடியவில்லை. அது **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதாக இருக்கிறது. அது உண்மை.

146. நீ யாருடனோ சற்றுநேரத்திற்குமுன் பேசிக் கொண்டிருந்தாய், அது உன்னுடைய ஒரு உறவினர், ஏதோ ஒன்றைக்குறித்து மிகுந்த சந்தோஷத்துடன் பேசிக் கொண்டிருந்தாய். அது உன்னுடைய சகோதரியாவாள், சுரப்பி சம்பந்தமான பிரச்சனையிலிருந்தும் மற்றும் பெருங்குடல் பிரச்சனையிலிருந்தும் சற்றுமுன் அவள் சுகமடைந்தாள். அவள் பயந்த சுபாவம் கொண்டவள். அதன்பிறகு மற்றொருவர் காட்சியில் தோன்றுவதைப் பார்க்கிறேன். அது சற்று நேரத்திற்கு முன்பாக, ஒரு சகோதரி, என்னுடைய கூட்டத்தில் சுகம் அடைந்தாள். அவளுக்குப் புற்றுநோய் இருந்தது, சுகத்தைப் பெற்றாள்.

147. நீ இந்தப் பட்டணத்திலிருந்து வரவில்லை, நீ மிசிகனில் (Michaigan) உள்ள டெட்ராயிட் (Detroit) என்னும் இடத்திலிருந்து வந்திருக்கிறாய், உன்னுடைய

பெயர் ஐரீன் (Irene) என்பதாகும், உன்னுடைய கடைசிப்பெயர் டன் (Dunn) என்பதாகும். உன்னுடைய சகோதரியின் பெயர் ஏதோ வையோல (Viola) என்பது போல. வீட்டிற்குச் சென்று சுகமாயிரு, கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில், நீ எதைக் கேட்டாயோ அதைப் பெற்றுக்கொள்வாயாக. ஆமென்.

*சகலமும் கைகூடிடும், என்று நீ விசுவாசித்தாயானால்.*

148. சீமாட்டியே, நீ என்ன நினைத்துக் கொண்டிருக் கிறாய்? இந்தக் காரியங்கள் கடைசி காலத்தில் இரக்கத் தினால் வெளிப்பட்ட தேவனிடத்திலிருந்து வருகிறது என்று விசுவாசிக்கிறாயா?

149. அந்தக் கடைசியில் உட்கார்ந்துகொண்டிருக்கும் கருப்பின சீமாட்டியே, இப்பொழுதே தேவன் உன்னை தொட்டார் என்பதை நீ நம்புகிறாயா? நீ கொண்டிருந்த மூல வியாதி உன்னைவிட்டு நீங்கிவிட்டது என்பதை நம்புகிறாயா?

150.அப்படியானால் உன் கரத்தை உயர்த்து; அவளுக்கு அடுத்து உட்கார்ந்திருக்கிற நீ, நான் உன்னை அழைக்க வில்லையே என்று வியப்படைந்து கொண்டிருக்கிறாய், நான் தேவனுடைய ஊழியக்காரன் என்று விசுவாசிக் கிறாயா? நம்புகிறாயா? உன்னுடைய கண்களில் பிரச்சனை கொண்டுள்ளாய். அது உண்மை. அது கர்த்தர் உரைக்கிறதாவது என்பதாக உள்ளது. நல்லது, நீ வீட்டிற்குச் செல்லலாம், சுகமாய் இருப்பாயாக, நீ அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாய். ஆமென்.

151. அந்த நபர் எதைத் தொட்டாள்? அவர்கள் என்னிலிருந்து நாற்பது அடித் தூரத்தில் இருக்கிறார்கள். அவர்கள் ஒருபோதும் என்னைத் தொடவில்லை. அவர்கள் பிரதான ஆசாரியனைத் தொட்டார்கள், அவர் அந்நாளில்

மனித உதடுகளைப் பயன்படுத்தினார். நீங்கள் பார்க்கிறீர்களா?

152. அதை நீ விசுவாசிக்கிறாயா? அப்படியா? எனக்குப் பதில் சொல்வதற்கு நீ சிறிது பயப்படுகிறாய். நீ என்னைக் குறித்து பயப்படவில்லை, ஆனால் நீ பயப்படும் காரணம் உன்னுடைய பேச்சை குறித்தது. நீ ஒரு ஜெர்மானியன். அது உண்மை. ஆனால் உனக்கு மூட்டு வலி உள்ளது, அதற்காக நான் ஜெபிக்க வேண்டும் என்று விரும்புகிறாய். கர்த்தராகிய இயேசு உன்னை ஆசீர்வதிப்பார் என்றும் சுகப்படுத்துவார் என்றும் பரிபூரண சுகத்தைக் கொடுப்பார் என்றும் நம்புகிறாயா? அது அப்படியா?

153. நீ வேறு ஒருவருக்காகவும் ஜெபித்துக் கொண்டிருக்கிறாய். அது உண்மை. உனக்கும் அந்த ஜனங்களுக்கும் இடையில் தண்ணீர் இருக்கிறது, தண்ணீர் ஏராளமாய் இருக்கிறது. அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற தேசம் பிரஞ்சு நாட்டிற்கு அப்பால் உள்ளது, அது ஜெர்மனி ஆகும். ஒரு சகோதரிக்காகவும், இரண்டு சகோதரர்களுக்காகவும் ஜெபித்துக்கொண்டிருக்கிறாய், அவர்கள் இப்பொழுது ஜெர்மனியில் உள்ளனர். நான் அவர்களை பார்க்கிறேன். உன்னுடைய சகோதரி இருதயக் கோளாறு மற்றும் பித்தநீர்ப்பை பிரச்சனையினால் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறாள் அதைக்குறித்து அவள் உனக்கு எழுதியும், கூறியும் உள்ளாள். உன்னுடைய சகோதரர்களில் ஒருவருக்கு அவருடைய காலில் பிரச்சனை உள்ளது, மற்றொரு சகோதரன் மூளை வளர்ச்சிக் குன்றியவன். அது உண்மை. கைக்குட்டையை எடுத்து உன் கண்ணீரைத் துடைத்துக்கொள், நீ இப்பொழுது உன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருக்கிற உன் கைக்குட்டையை எடுத்து அதை அவர்களுக்கு அனுப்பி வை. சந்தேகப்படாதே, கர்த்தர் அவர்களைச் சுகப்படுத்துவார். ஆமென். தேவனிடத்தில் விசுவாசமாயிரு.

154. சந்தேகப்படாதே. சகலமும் கை கூடிடும். இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார்.

நீ எனக்கு அந்நியராய் இருக்கிறாய் என்று நான் எண்ணுகிறேன்.

155. இப்பொழுது நீ ஜெபித்துக்கொண்டிருக்கிறாய், விசுவாசம் உள்ளவளாயிரு. இப்பொழுது, அநேகர் ஜெபித்துக்கொண்டிருக்கும்போது, அது ஏறக்குறைய என்னை நிலைகுலையச் செய்கிறது. தேவனுடைய குமாரன் அவருடைய சபைக்குப் பரலோகத்திலிருந்து இரக்கத்தினால் தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

156. நீ அதிகமாக பதற்றப்படுகிறாய், உனக்கு உன்னுடைய வயிற்றில் ஒரு அறுவைச்சிகிச்சை நடந்துள்ளது, அந்த அறுவைச் சிகிச்சையின்போது வயிற்றில் பாதிப்பாகம் வெட்டி எடுக்கப்பட்டது. நீ அதிகமாய் உணவு உட்கொள்ள முடியாது. அவர் உன்னை சுகமாக்குவார் என்று நம்புகிறாயா? நீ விசுவாசிக்கிறாயா?

157. ஏதோ ஒன்று என்னிடம் சொல்வதற்கு நீ விரும்புகிறாய், ஏனென்றால் உன் இருதயத்தில் அதைக்குறித்த பாரம் உண்டாயிருக்கிறது. சீமாட்டியே, உன் பாரம் என்ன என்பது எனக்குத் தெரியாது, இயேசு கிறிஸ்து மட்டுமே அதை வெளிப்படுத்த முடியும். அவர் அதை வெளிப்படுத்துவார் என்று விசுவாசிக்கிறாயா? அவர் அதை வெளிப்படுத்தினால், அவருக்குத் துதிகள் செலுத்துவாயா?

158. அது வேறு ஒருவருக்கானது, அது உன்னுடைய சகோதரியாகும். உன்னுடைய அந்த சகோதரி இந்த நாட்டில் இல்லை. அவள் உஷ்னமான ஒரு தேசத்தில் இருக்கிறாள். தென்பகுதியில், ஜார்ஜியாவில் உள்ள அட்லாண்டா (Atlanta) என்னும் இடத்தில், அந்த ஸ்திரியைக்குறித்து வினோதமான ஒன்றை காண்கிறேன். அவள் ஒரு பயணத்தில் இருந்தாள்... அவள் ஒரு ஊழியக்காரியாவாள்

அல்லது மிஷினரியாக இருக்கிறாள். சீனாவில் அவள் மஞ்சள் நிற ஜனங்கள் வாழும் இடத்தில் உள்ளாள். அவள் சீனாவில் இருந்து திரும்பி வந்திருக்கிறாள், திரும்பி வந்த மிஷினரி.

159. அவளுடைய வலது மார்பகத்தில் புற்றுநோய் வந்து இப்பொழுது மரித்துக்கொண்டிருக்கிறாள். மருத்து வர்கள் அவள் பிழைக்கமாட்டாள் என்று கூறிவிட்டனர். நீயோ உன் கையில் உள்ள கைகுட்டை துணியை எடுத்து கர்த்தருடைய நாமத்தில் அதை அவளுக்கு அனுப்பிவை, தேவனுடைய மகிமைக்கென்று அவள் பிழைத்து, ஜீவிப் பாளாக. அது கர்த்தர் உரைக்கிறதாவது என்பதாகும். அது அவ்விதமாகவே நடப்பதாக. புறப்பட்டுச் செல், நம்பிக்கை யுடன் இரு. சந்தேகம் கொள்ளாதே.

*உன்னால் விசுவாசிக்க மட்டும் கூடுமானால், சகலமும் கைக்கூடிடும்.*

160. நான் நினைக்கிறபடி, நாம் ஒருவருக்கொருவர் அந்நியர்களாக இருக்கிறோம். உன் இருதயத்தில் இருக்கும் இரகசியத்தை கர்த்தராகிய .இயேசு வெளிப்படுத்து வாரானால் அல்லது உன்னுடைய கடந்தகால ஜீவியத்தில் ஏதோ ஒன்றை நான் அறிந்துகொள்ளச் செய்வாரானால், நான் வார்த்தையிலிருந்து சத்தியத்தைப் பிரசங்கித்தேன் என்பதை நம்புவாயா?

161. இங்கு கூடியிருக்கும் ஜனங்களும்கூட இதை ஏற்றுக்கொள்வார்களா என்று நான் வியக்கிறேன். "இந்த ஸ்திரியின் இருதயத்தில் உள்ளதை கர்த்தர் வெளிப்படுத்து வாரானால், நான் நம்புவேன், ஒருபோதும் சந்தேகம் கொள்ளமாட்டேன்," என்று கூறுங்கள்.

162. ஐயா அங்கே கடைசி வரிசையில் உட்கார்ந்து இருப்பவரே, நீர் கவலைப்படாதிருப்பீரானால், உம்முடைய முழு இருதயத்தோடும் விசுவாசித்தால், நீர் மிகவும்

கவலைபட்டுக்கொண்டிருக்கிற உம்முடைய இருதய வியாதி யிலிருந்து தேவன் உம்மை சுகப்படுத்துவார்.

163. அவருக்கு அடுத்து இருக்கிற சிறிய சீமாட்டியே, உன்னுடைய விசுவாசம் அதைச் செய்தது. இப்பொழுது விசுவாசித்து, ஜீவனோடு இருப்பாயாக.

164. நான் தேவனுடைய வார்த்தையிலிருந்து சத்தியத்தைப் பிரசங்கித்தேன், அதை நம்பவேண்டும் என்று உன்னுடைய விசுவாசத்துக்கு நான் சவால் விடுகிறேன். அந்த தூதர் என்ன கூறினார்? “ஜனங்களை உன்னை நம்பும்படி செய்வாயானால், நீ ஜெபிக்கும்போது உத்தமமாய் இருந்தால் உன்னுடைய ஜெபத்திற்கு முன்பாக எதுவும் நிற்க முடியாது.”

165. பின்னால், எனக்கு வலதுபக்கத்தில், உட்கார்ந் திருக்கிற சிறிய சீமாட்டி, அவள் மடியில் ஒரு சிறு குழந்தையை பிடித்துக் கொண்டிருக்கிறாள். சற்றுமுன்பு அவள் தன் தலையைத் தாழ்த்தி ஜெபம் செய்து கொண்டிருந்தாள், இப்பொழுது அவள் தன் கண்களை ஏறெடுத்தாள், ஏனென்றால் அவள் தன்னுடைய குழந்தைக் காக ஜெபித்துக் கொண்டிருந்தாள். அது உண்மை, சீமாட்டியே, அந்தக் குழந்தைக்கு இருக்கும் பிரச்சனை என்னவென்று தேவனாகிய கர்த்தர் வெளிப்படுத்து வாரானால், நீ எதைக் கேட்டாயோ அதை நீ பெற்றுக் கொள்வாயா? அந்தக் குழந்தையின் சுகத்தை நீ கேட்டாய். சுகமாக்குவதற்கு என்னில் ஒரு வல்லமையும் கிடையாது. நான் ஒரு சுவிசேஷ ஊழியக்காரன் மட்டுமே. ஆனால் உன்னுடைய குழந்தையின் தலையில் சொறி கொப்புளங்கள் வெடித்துள்ளன. அது உண்மை. இப்பொழுது, உன் முழு இருதயத்தோடும் விசுவாசிப்பாயானால், நீ எதைக் கேட்டாயோ அதைப் பெற்றுக்கொள்வாய்.

166. உனக்கு பின்னால் இருக்கும் சிறிய சீமாட்டி மிகவும் பதற்றம் அடைந்துள்ளாள், எந்த மணி நேரத்திலும்

அவளுக்கு குழந்தைப்பேறு நடந்து தாயாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள். அந்த சிறு குழந்தையைக்குறித்த நினைவில் அவள் அழுதுகொண்டிருக்கிறாள், குழந்தையின் நலன் குறித்து அவளுக்கு ஒருவித அச்சம் ஏற்பட்டுள்ளது. அவளுக்கு இப்போதே பிரசவிக்கிற காலகட்டத்தில் இருக்கிறாள். அவள் பதற்றத்துடன் இருக்கிறாள், ஆனால் சகோதரியே பயப்படாதே. தேவன் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்து செல்கிறார். அவர் உனக்கு விடுதலை அளிப்பார்.

167. ஐயா, எதற்காக உம்முடைய கண்களில் வழிகிற கண்ணீரைத் துடைத்துக்கொண்டிருக்கிறீர்? ஏன் கர்த்தரிடத் தில் நம்பிக்கை வைக்கக்கூடாது, வயிற்றுப் பிரச்சனை யிலிருந்து நீர் சுகமாக்கப்படுவீர். அவர் உம்மை சுகப் படுத்துவார். இப்பொழுது நீர் சுகமாக்கப்பட்டுவிட்டீர், அதை விசுவாசிக்கிறீரா? சரி போய் உம்முடைய இரவு உணவைப் புசிப்பீராக. ஆமென்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்மேல் நம்பிக்கை வைக்கமாட்டீரா?

168. அங்கு அந்தக் கடைசியில் இருதயப் பிரச்சனை யோடு இருக்கிறீர், தேவன் உம்மை சுகமாக்குவார் என்று விசுவாசிக்கிறீரா? “நீ விசுவாசிக்கக்கூடுமானால்!” அது உம்மை ஆச்சரியபடவைத்தது, இல்லையா? உம்முடைய காலூன்றி நில்லும். சரி, கர்த்தராகிய இயேசுவின்மேல் நீர் விசுவாசம் வைத்தால் இருதயப் பிரச்சனையை மறந்து விடுவீராக. அவருடைய இரக்கமும், கிருபையும் உம்மைத் தொட்டது. அது தேவனுடைய குமாரன் பரலோகத்திலிருந்து தன்னை வெளிப்படுத்துவதாகும். போய், விசுவாசமுள்ள வனாக இருப்பீராக.

169. ஐயா, நீர் மிகுந்த மகிழ்ச்சியுள்ளவராக இருக்கிறீர். நீர் உம்முடைய இருதயத்தில் சந்தோஷத்தைக் கொண்டுள் ளீர், ஏனென்றால் நீர் ஜெபித்துக்கொண்டே இருக்கிறீர். நீர்

எதைக்குறித்து ஜெபித்துக்கொண்டிருக்கிறீர் என்று கர்த்தர் எனக்கு வெளிப்படுத்தித்தருவாரானால், அது நடக்கும் என்று நம்புவீரா? அது உம்முடைய மனைவிக்காக. அவளுக்கு இரண்டுமுறை பக்கவாதம் வந்துள்ளது, அவளுடைய இடுப்பு உடைந்து போயிருக்கிறது. நீர் விசுவாசித்தால் தேவன் அதை உமக்காக பொறுப்பெடுத்துக் கொள்வார். ஆமென்.

170. நீர் நம்புகிறீரா? உமக்கு ஒரு அறுவைச் சிகிச்சை நடந்துள்ளது, அது உம்மை மிகவும் பலவீனம்கொள்ளச் செய்துவிட்டது, இரத்த சோகையுடன் இருக்கிறீர். அந்தக் கட்டி உம்மை மிகவும் பலவீனப்படுத்தியுள்ளது. நீர் வேறு ஒருவருக்காகக்கூட ஜெபித்துக்கொண்டிருக்கிறீர், அது ஒரு சகோதரி. அவள் மிகுந்த உயர் இரத்த அழுத்தம் கொண்டுள்ளாள். அவளுடைய கையில் மருத்துவ உப கரணங்களை வைப்பதைப் பார்க்கிறேன், (அது உண்மை), அவர் ஒரு பலசாலியான மனிதனும்கூட, அவர் ஒரு மருத்துவர். அவள் இருதய நோயையும் கொண்டுள்ளாள். அவர் இவ்விதமாக கவனித்துக் கேட்டும், அவளுடைய முதுகை தட்டிக்கொடுத்தும், கருவியை காதில் வைத்து கேட்கிறார். நீர் விசுவாசிக்கிறீரா?

171. அவள் உம்மை சாலி (Sally) என்று அழைப்ப துண்டு. உம்முடைய பெயர், ஓலண்டர் (Olander) என்பதாகும். நீர் வசிக்கும் தெருப் பெயர் மாண்ட கிளேயர் (Mont Clair) என்பதாகும். உம்முடைய விலாசம் 5526 எண் கொண்டது. இப்பொழுது, நீர் உம்முடைய முழு இருதயத்தோடும் விசுவாசித்தால், அப்படியானால் கைக்குட்டை துணியை அவள்மேல் வையும், சமாதானத் தோடு செல்வீராக. தேவன் உம்மோடு இருப்பாராக, உம்முடைய இருதயத்தின் வாஞ்சையை தேவன் அருளிச் செய்வாராக.

172. தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள். இங்கிருந்து நான் கடந்து செல்லவேண்டிய நேரம் வந்துவிட்டது, அந்தப் பையன் உந்தி தள்ளுகிறான். உன் முழு இருதயத் தோடும் இப்பொழுதே நம்புவாயா? அப்படியானால், சற்றுநேரம் உன் கால்களில் எழுந்து நிற்பாயாக.

173. நான் உன்னை ஏதோ ஒன்றை (ஒரு நிமிடம் பொறுங்கள்) செய்யும்படிக் கேட்கப்போகிறேன், அது வினோதமாகக் காணப்படலாம். தேவனுடைய குமாரன் பரலோகத்திலிருந்து வெளிப்பட்டு கொண்டிருக்கிறார் என்பதை நம்புகிறீர்களா? அப்படியானால் ஒருவர் கரத்தை மற்றொருவர்மேல் வைப்பீர்களாக. உங்கள் கரங்களை ஒருவர் மற்றொருவர் மேல் இப்படியாக வைப்பீர்களாக. "அவர்கள் வியாதியஸ்தர்மேல் தங்கள் கரங்களை வைப் பார்கள், அவர்கள் சுகமடைவார்கள்" என்று பரிசுத்த வேதா கமம் கூறுகிறது. அவர்கள் தங்கள் கரங்களை வியாதி யஸ்தர் மேல் வைப்பார்கள்.

174. இப்பொழுது, நான் ஜெபிப்பதுபோல நீங்களும் ஜெபியுங்கள், நான் விசுவாசிப்பது போல் நீங்களும் விசுவாசியுங்கள், இங்கு பிரசன்னமாயிருக்கிற பரலோகத் தின் தேவன் தாமே உங்களை சுகமாக்குவாராக.

175. கிறிஸ்துவுக்கு என்று தங்கள் ஜீவியத்தை ஒப்புக் கொடுத்தவர்கள், துரிதமாக ஒரு நல்ல சபைக்குச் சென்று கர்த்தருடைய பெயரால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்,

176. அன்புள்ள பரலோகத்தின் தேவனே, இன்று இரவில் எங்கள் மேல் இரக்கமாயிரும். நாங்கள் களைப் புற்றவர்களாயும், பலவீனராயும் இருக்கிறோம். ஆனால் நான் ஜெபிக்கிறேன், ஆசீர்வதிக்கப்பட்ட நித்திய தேவனே, இந்த வேளையில் உம்முடைய ஆவியை ஒரு வெடியைபோல அனுப்புவீராக, அது கூட்டத்தினிரிடையே உள்ள அவிசுவாச சங்கிலிகளை உடைத்து எறியட்டும்

இப்பொழுதே அவர்கள் சுகமாக்கப்படும்படி விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிரப்பப்படுவார்களாக,

177. சாத்தானே உன்னுடைய நாட்கள் எண்ணப்பட்டுவிட்டன, உன்னுடைய இராஜ்ஜியம் எண்ணப்பட்டுவிட்டன. நீ தராசில் நிறுக்கப்பட்டு குறைவுடையவனாய்க் காணப்படுகிறாய். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இந்தக் கூட்டத்தாரைவிட்டு வெளியே வா.

178. இப்பொழுது, விசுவாசிக்கிற அனைவரும் உங்கள் கரங்களை உயர்த்தி அவருக்குத் துதி செலுத்தக் கடவோமாக.

**இந்த புத்தகம் கடலூர் ஜீசஸ் வாய்ஸ் ஜெப வீடு சபையின் 43 வது ஆண்டை முன்னிட்டும், மறைந்த போதகர் V. ஜான் வெங்கடேசன் அவர்களின் வாஞ்சைக்கிணங்கவும் சபை விசுவாசிகளின் காணிக்கைகளினால் அச்சடிக்கப்பட்டது.**

**போதகர் : ☎ 9976990115**

## எமது வெளியீடுகள்:

1. ஜீவன் 58–0519
2. பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை... 53–0614
3. தேவனால் அருளப்பட்ட சுகமளித்தலின் வழி 54–0719
4. குருடன் பர்திமேயு 61–0124
5. தேவன் தம்முடைய சிந்தையை... 65–0427
6. ஆவிக்குரிய புத்திரசுவிகாரம் 56–0923
7. உம்முடைய வார்த்தையின்படியே 53–0608E
8. யேகோவாவின் ஏழு கூட்டு நாமங்கள் 55–0120
9. முன்மாரியும் பின்மாரியும் 60–0303
10. அவர் அந்த வழியாக கடந்துபோக... 57–0727
11. யோசேப்பு தன் சகோதரர்களை சந்தித்தல் 56–1230
12. ஒரு வில்லிலிருந்து எய்யப்பட்ட தேவனுடைய... 56–0801

13. மன்னிக்க முடியாத பாவம் 54–1024

14. ஒரு முற்றிலுமானது 63–1201M

15. தேவசித்தம் இல்லாமல் தேவனுக்காக ஒரு சேவை செய்ய முயற்சித்தல் 65–1127B

16. வெளியே அழைக்கப்பட்டவர்கள் 58–01–09

17. ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு (மறுபதிப்பு)

18. ஏழு சபை காலங்களின் வியாக்கியானம் (மறுபதிப்பு)

19. இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதல் (மறுபதிப்பு)

20. தானியேலின் எழுபது வாரங்கள் (மறுபதிப்பு)

21. சுகமாகுதலைக் குறித்த சிந்தனைகள் (மறுபதிப்பு)

## அடுத்த வெளியீடுகள்:

1. மகத்தான இளவரசனும், ராஜாவுமாகிய மெல்கிசேதேக்கு 55–0109 M
2. வில்லியம் பிரன்ஹாமின் வாழ்க்கை வரலாறு, பாகம்- 1
3. உலகம் மீண்டும் விழுந்துபோகுதல் 63–1127
4. ஒரு தீர்க்கதரிசியின் தென்ஆப்பிரிக்கப் பயணம்
5. ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை 58–1002
6. அழுத்தத்தை வெளியேற்றுதல் 63–0113M
7. இயேசு யார் ? 64–0620M
8. கிறிஸ்து கதவைத் தட்டுகிறார் 58–03–30E
9. கேள்விப்படுதல், பெற்றுக்கொள்ளுதல் மற்றும் செயல்படுதல் 60–0607
10. எல்–ஷடாய் 59–04–16
11. விளங்காத சத்தம் 61-03-15

12. தெய்வீக ஐக்கியத்திற்கான தேவனுடைய அருளப்பட்ட அணுகுமுறை 60-06-30

**இலவசப் பிரதிகளுக்கு:**

**சகோ. பெனியேல் எபி (கோவை)**

**போன்: +91 9047268278, 9597378278**

**website: www.wordoflife.in**

**Visit The Website**

**Download PDF**

சகோதரர் வில்லியம் மரியன் பிரன்ஹாம் அவர்களால் பிரசிங்கிக்கப்பட்ட 1,200க்கும் மேற்பட்ட, செய்திகள் ஒலிநாடா மற்றும் புத்தக வடிவில் **www.wordoflife.in** என்ற இணையதளத்தில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் இலவசமாக பதிவிறக்கம் செய்யவும், அச்சடித்துக் கொள்ளவும் இயலும்.

## குறிப்புகள்: